[illegible]

V 6 No. 23 8 June 1933

JL
[illegible]211,N28KN
N33.6.23.
189181

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 AUG 1933
MADRAS

Vol 6.] 1933 ஞு ஜூன் மீ 8உ [No. 23

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 441
2. காற்று மழை (அங்கம் 2. களம் 1.) Shakespeare's Tempest 443
3. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 2-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 445
4. பொதிகை நிகண்டு (தூ, தெ, தே, தை, தொ, தோ) S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 446
5. தமிழ்ப் பாடம் நளவெண்பா-கலிநீங்குகாண்டம் 447
6. யாப்பிலக்கணம் (பாவினம்-ஆசிரியத்தாழிசை, கலித்தாழிசை, வஞ்சித்தாழிசை) வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 449
7. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம், BA.BL. 450
8. கலித்தொகை (பாலைக்கலி, 9, 10) T. A. கனகசபாபதி முதலியார் 453
9. ஞான தீபம் T. R. இராஜகோபால் 455
10. வர்த்தமானம் 459

கலாநிலயம்.

கள்வரே நல்லோர் போலும் 2.

எத்தனை வகைகளிற் கூறினும் இறுதியில் நாம் உணர்ந்து உய்ய நிற்பதொன்றே. மற்றவர் நம் உயிரையோ உடலையோ பொருளையோ நலிகின்றபோதெல்லாம், நம்பால் ஓர் நீதி செலுத்தப்படுகின்றதென்னும் அகண்டாகாரமான உண்மையை நினைத்துக் கொள்வதே நெறிதாம். குற்றம் இருந்தாலன்றி நீதியின்படி செலுத்தப்படுகின்ற தண்டனை யில்லை. ஆதலின், ஒருவன் நம்மை வைதவுடன் அடித்தவுடன் அல்லது நம் பொருளிற்கோர் அழிவு செய்தவுடன், நாமே குற்றவாளியாயிருந்தோம் என்ற நிச்சயத்தை எய்துதல் இன்றியமையாதது. நாம் எத்தனை எத்தனை துய்க்க நினைத்தோம், அதன்பொருட்டு எத்தனை எத்தனை பேரை அடிக்கவும் கெடுக்கவும் நினைத்தோம், என்பன போன்றவற்றைச் சற்றே எண்ணிப் பார்த்துக்கொண்டால், நாம் தண்டனை அடையவேண்டியது நீதியே என்பது நம்மில் எவ்வளவு குறைந்த புத்தியுடையவர்க்கும் புலப்படாமற் றீராது. நம்முடைய குற்றம் நிச்சயமானபிறகு குற்றமுடையவர் தண்டிக்கப்படவேண்டும் என்னுங் கொள்கையை முதலில் நாம் நமக்கே செலுத்திக்கொள்ள முயல்வதன்றோ முறை. அடிப்பவனும் திருடுபவனும் குற்றம் புரிபவன் ஆயினும் ஆகலாம், அல்லது முன்னே விளக்கியபடி குற்றமற்றவனாய் நிற்பினும் நிற்கலாம். மற்று, அடிபட்டவனும்களவுகொடுத்தவனும்,குற்றவாளியே என்னுஞ் செய்தி ஐயமற விளங்குகின்றது. ஒருவன் குற்றமுடைய நெஞ்சினன் அல்லனாயின்,பிரபஞ்சநீதியை நடத்துமொரு கருவியாய் வந்து பிறனொருவனும் அவனை நலிந்திருக்கமாட்டான். ஸ்ரீ இராமதீர்த்தரின் மீது புலிகள் பாய்ந்ததில்லை.

ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறுகன்னத்தையுங் காட்டச்சொன்ன இயேசுநாதர், இந்த வாய்மையையே நம் திருவுள்ளத்தில் வைத்துச் சொன்னார் என்று எண்ணிற் பிழையாகாது. "நீ குற்றமுடையவனாதலின், அவன் உன்னை அடித்தான். அத்தண்டனை போதுமோ போதாதோ என்னும் ஐயம் நீங்க இன்னொருகன்னத்தையுங் காட்டி உன்னுடைய முழுதண்டனையையும் பெற்றுக்கொள். குற்றத்திற்குக் கழுவாய் தண்டனை. குற்றம் எஞ்சிநிற்பதனினும் தண்டனை விஞ்சிப்போவதால் கெடுதியில்லை; காட்டிவிடு மறுகன்னத்தையும்" என்றவர் அப் புனிதர் ஒருவரேயல்லர். இவ் வுண்மைச்சொல் எங்கும் வழங்குகின்றது. அச்சொல்லின் உண்மையோடு நன்மையையும் நம் மனம் ஏற்றுக்கொள்ளவல்ல பயிற்சி செய்வித்துதவுகின்றவர்கள் உளராயின், பிறகு களவினோடு அவ்வினத்துத் தீமைகள் அனைத்தும் இவ்வுலகில் மருந்திற்கும் காணல் அரிதாகிவிடும். இதுவன்றி, அரசியலினும் இல்வாழ்க்கையினும் கள்வருக்குக் காவலுந் தண்டனையுமே அமைப்பதற்கு ஆரவாரம் செய்வதெல்லாம், புதிய புதிய திருடுகளுக்கு வழிசெய்து வைப்பதன்றி வேறொன்று மாகாதே. கண்ணுங் காதுமுடையோர்க்குப் பிற கரிகள் வேண்டா.

பிறர்பொருளைக் கவர்வார் மாத்திரமே கள்வரெனத் தகுந்தவரல்லர். இயல்வது கரப்பவர் கொடியரிற் கொடிய கள்வர். எடுக்க இயல்கின்ற பொருளைப் பிற

ரிடமிருந்து எடுத்துக்கொள்ளும் களவில் கையாளப்பெறுகின்ற சூழ்ச்சிகளை, அவை புல்லியவேனும், ஒரு சிறிது வியப்பதற் கிடமுளது. நடைபெறுங் களவுகளில் சிற்சிலவற்றிற்கு ஆற்றமாட்டா வறுமை காரணமாகின்றதாதலின், கள்வரிற் சிலர் இரங்குதற் குரியராய் நிற்கின்றனர். மற்று, கொடுக்க இயல்கின்ற பொருளை மற்றவர்க்குக் கொடாதாரை என்சொலி வெறுப்பது! ஈத்துவக்கு மின்பத்தை எண்ணவேண்டா: வானத்தவர்க்கு நல்விருந்து ஆவதை நினைக்கவேண்டா; காதறுந்த ஊசியுங் கடைவழிக்கு வாராமை கருதவேண்டா; ஆபுத்திரனைப்போல், "மன்னுயிரோம்பும் இம் மாபெரும் பாத்திரம் என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேன்" எனத் தனக்கின்றிப் பிறர்க்கே உதவுதல் கடன் என்று ஒழுகாவிடினும் வேண்டா: அன்றன்று தான் உண்டதுபோக எஞ்சியதையேனும் வறியோர்க்கு உதவாமல், பிற்றைநாள் புசித்தற்கு வேண்டுமென்றும், மற்று, தனக்குப் பின்வரும் மகன் மகன் மகன் அவன் மகனுக்கும் வேண்டுமென்றும், வைத்து வைத்துப் பொருளைப் பெருக்கும் வன்னெஞ்சக் கள்வரினும் கொடியரோ, வறுமையானும் வருவாய்க்கு வேறுவழி யின்மையானும் தம் கையைப் பிறர் பையில் போட்டெடுக்கும் மக்கள் தாமே, என்ற கேள்விக்கு எளிதில் எதிர்விளம்ப வருபவர், அறிவினும் துணிவே அதிகம் உடையவராதல் திண்ணம். ஈகைக்கியைய இந்நெஞ்சு இளகுதற்கு இயன்றன செய்யா முன்னம் ஈட்டுதற்குரியன முயல்வாரெல்லாம், அம்முயற்சிமுறைகள் தம்வரையில் பழுதற்றனவேயாயினும், களவே கற்கின்றாரன்றி வேறன்று. ஈட்டுதற்குப் பயிற்றுவிக்கக் கல்விச்சாலை ஒன்றும் வேண்டா. பல்லையும் உகிரையும் புலிகளுக்குத் தீட்டியுந் தரவேண்டுமோ! பல்லைத் தீட்டும் பயிற்சியே யல்லாமல் நம் கல்லூரிகள் வேறொன்றுஞ் செய்யக் காண்கிலம். கருணைக்கிரங்காத வன்மையைக் கற்பிக்கும் இம்முயற்சிகளைக் கல்வியென் றழைப்பதனினும் பொல்லாங்கு வேறில்லை.

ஈகையே ஒளியுடைத்து; கரவெல்லாம் இருள். ஈயாமல் கரப்பவர் இருப்பதாற்றான் கள்வர் பிறக்கின்றனர். களவெனப்படுவது இவ்விருளின் பிள்ளையே. எனின், கரவுடைய நெஞ்சினர்களாய்த் தாமே துய்ப்பதற்கு வாய்திறந்து திரியும் மக்கள் தாமே பெற்று வளர்த்த களவைத் தண்டிக்கப்புகுவது தருமமன்று. களவும், அக்களவுபோன்ற மற்ற எல்லாத்தீமைகளும் இருளிற்கு நிகராகுமாதலின், அத்தீமைகளைக் கடிந்து தண்டிக்கவேனும் திருத்தவேனும் புகுவதால் பயன் யாதுமில்லை. இச்சொல், இக்காலம் நடைபெறும் சீர்திருத்த முயற்சிகள் அனைத்திற்கும் ஒக்கும். இருளினைக் கடிந்து ஓட்ட இயலாதென்பதை மக்கள் சற்றே சிந்தித்துத் தெளிந்துகொள்வார்களாயின், இக்காலச் சீர்திருத்தக் கோலங்களிற் பற்பல கலைந்து உதிர்ந்துவிடும். இது எவ்வளவிற்கு எவ்வளவு விரைவில் நேர்கின்றதோ அவ்வளவிற் கவ்வளவு நன்மையே. ஓர் அறை இருளடைந் திருக்கின்றதென்னின், அவ்விருளைத் தடிகொண்டு அடித்தோட்டி அகற்ற முயல்வாருளரோ. அம்முயற்சியினால் அவ்வறையின்கண் உள்ள நல்ல பொருள்கள் சில உடைந்தழிவதல்லால் இருள் நீங்கிற்றென்பது எந்நாளுமில்லை. கடவுளே எல்லாவற்றையும் படைத்தார் என்னுஞ்சொல் ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. கடவுள் இருளைப் படைக்கவில்லை. என்பது நிச்சயம். அவரால் படைக்கப்படாத ஒன்றிற்கு இடங்கொடுப்பதுதான் தீமைக்கெல்லாங் காரணமாக முடிகின்றது. இருள் நீங்க வேண்டுமாயின், கடவுளால் படைகப்பட்ட ஒளியைக் கொணர்வதன்றி வேறோர் முறையில்லை. விளக்கினைக் கொணர்வோமாயின் இருள் தானே நீங்கும். மற்று, ஒளிவரும் வழியையெல்லாம் அடைத்துவிட்டு, இரண்டொருவர் ஏற்றித்தருகின்ற விளக்கையும் அணைத்துவிட்டு, இருளினைப் பொருதுபோக்குகின்றேன் எனப் பதறுவார் பேதைமையைக் காணக் காண, உண்மையின்பால் ஊக்கமுடையோர் மனம் வாடிவாடி வதங்காமல் என் செய்யும். தீமையின் இருளைப்பற்றி நினைக்கவேண்டா; தருமத்தின் ஒளியைக் கொணரக் கருதினாற்போதும். இருளை நீக்கியபின் வெளிச்சத்தைக் கொணர்வோம் என்பாரில்லை. ஒளியைக் கொணர்வதே இருளை நீக்குவதாம். இதுவேமுறை என்பதை வற்புறுத்தி, F. G. பியர்ஸ் என்பவர் வரைந்துள ஓர் கட்டுரை இங்குக் கருதுதற் குரியது:—

What is "The Way of the East"? What were the great guiding principles which the men of ancient times, in India and in Lanka, followed first of all in seeking the solutions to their problems?

Ere we try to answer this question, let us note one thing. The East has always placed much emphasis on the importance of the conduct of individuals in determining the course of events for a Nation, the West is swayed to a greater extent by material conditions, events and the details of outward happenings. The truth of this can be seen by a glance at the life-histories of a few of the great men of East and West. Let us take, at random, two from the past and two from the present. Think of the two conquerors, Ashoka the Great and Napoleon the Great. Ashoka's achievements were the outcome of religious conviction. His whole career was based on the idea of what he felt to be his duty to humanity. Napoleon, great as he was, was yet an opportunist, one who took advantage of events rather than one who guided them by the force of his character. It is true that there are exceptions. In the East, opportunists *have* arisen. Yet the greatest Heroes of the East are not such men. They are rather the men who shaped events by the force of an idea that possessed them, an idea not of self-aggrandisement (for that arouses but little real support anywhere, least of all in the East), but an idea of Service, of Duty.

Contrast, in modern times, men like Lloyd George with men like Rabindranath Tagore. Doubtless, Mr. Lloyd George is an able man, an exceptionally clever man, a man of imagination, as nearly all outstanding men are. Yet he is not trusted by his own colleagues, for no one knows what he will do next. He is a man who shapes his policy according to circumstances, rather than one who endeavors to bend circumstances in accordance with principles, by force of will. But Rabindranath Tagore has risen to his position of influence by sheer force of character, by the power of ideals, by reason of his own personal example as an embodiment of those ideals.

This, verily, is the way of the East. It is the way of personal example rather than that of opportunism, the way of Dharma rather than that of Diplomacy.

Its principles are best summed up in this very word Dharma. In India, this word means Function. It is often translated Duty. It comes to mean practically the laws of life according to which an individual, or a body of individuals, can find their greatest happiness and efficiency. It is with this great principle in view that we of the East must face our problems. Hitherto the principle of the West, competition, material aggrandisement, has miserably failed to bring happiness to mankind. The message of the East, a message full of hope, is that we should try for a solution along other lines, with the idea of Dharma as our guiding principle.

What does this imply? First of all, it implies a recognition by each one of us of what Dharma means, and an earnest endeavour to discover and to live our own individual Dharma. It means the recognition that each man is a unit, a part of the National and the Human Whole, not an isolated individual whose interests are different from those of the rest. What injures one, injures all. By one man's degradation, the whole human race is degraded; by one man's achievement, the whole human race benefits. Have we not read, indeed, that when the Lord Buddha attained to Enlightenment, the first of our humanity to achieve this, the whole universe rejoiced, sharing the supreme Joy of His Triumphant Achievement?

And there are ideals of which it is useless to speak in connection with political and social and religious affairs unless we make their practice a matter of our own daily lives. We shall never have a State whose policy is based on Universal Brotherhood, until we have citizens who practise "Maitri" (compassion) in their daily lives. From among the citizens must ultimately come the rulers. If we live compassionately now, in all things, we may hope to be governed and to be able to govern others according to principles of Compassion, in the days to come.

இவைகளை நினைத்துப்பார்க்குமிடத்து, தண்டிக்கப் புகுவோரினும் கள்வரே மிக்க நல்லவர் என்பதற்கு ஏதேனும் ஐயமுண்டோ.

REGISTRAR OF BOOKS 29 AUG 1933 MADRAS

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 2. களம். 1.

[433-வது பக்கத் தொடர்ச்சி]

கன்ஸாலோ:—மற்று, இதன் புதுமையோ யாதெனில்—உண்மையில் அது நம்பிக்கையைக் கடந்ததாயிருக்கின்றது (1).

ஸபாஸ்ட்டியன்:—சான்றுகள்கொண்டு சாதிக்கப் பெறுகின்ற புதுமைகள் பலவற்றைப் போலவே. (2)

கன்ஸாலோ:—நமது ஆடைகள் கடலில் நனைந்தனவாயினும், உப்புநீர்க் கறை படுவதின்றிப் புதுச்சாயம் இட்டதேபோல், கலையாமலும் ஒளி மங்காமலும் இருக்கின்றனவே.

அன்டோனியோ:—இவன் பைகளில் ஒன்று பேசுதற்குத்தான் வல்லதாயின், பொய்யே யுரைக்கின்றான் இவனென்று சொல்லாதோ? (3)

ஸபாஸ்ட்டியன்:—சொல்லும், அல்லது இவன் கதைப்பதை மிகவும் பொய்யாக மூடிவைத்துக்கொண்டு விட்டாலும் விடும் (4)

கன்ஸாலோ:—அரசனது அழகிய புத்திரி க்ளாரிபெல்லை, ட்யூனிஸ் நகர மன்னனுக்குச் செய்துதந்த வதுவையில், நாம் முதல்முதல் ஆப்ரிக்காவில் அணிந்துகொண்டபோது எவ்வளவு புதியதாக இருந்தனவோ அப்படியே இப்பொழுதும் நமது ஆடைகள் இருக்கின்றனவென்று எண்ணுகின்றேன். (5)

ஸபாஸ்ட்டியன்:—நல்ல கலியாணம் அது; நாமும் நன்றாக மீள்கின்றோம். (6)

ஏட்ரியன்:—தன்னேரில்லாத் தகைமைசான்ற இவள் போன்ற ஒருத்தியைத் தங்கள் அரசியாகப் பெறுகின்ற பாக்கியம் இதன்முன் ஒருபோதும் ட்யூனிஸ் நகரத்திற்கு வாய்த்ததில்லை. (7)

கன்ஸாலோ:—விதவை டைடோவின் காலத்திற்கப்பால் இல்லை. (8)

அன்டோனியோ:—விதவையா! அட, அதைக்கொள்ளைநோய் கொண்டுபோக! அந்த விதவை எப்படி வந்து புகுந்தது? விதவை டைடோவா? (9)

(1) "இந்தப் புதுமையைப் பார்," என்று கடலில் விழுந்தார்களேனும் தம்உடைகள் நனையவில்லை என்பதைச் சொல்லவருகின்ற கன்ஸாலோ, இடைப்பிறவரலாக, "இதனைச் சொன்னால் ஒருவரும் நம்பமாட்டார், அத்துணை ஆச்சரியமானது" என்றுகுறித்துவிட்டுமேலே விடயத்தைச் சொல்லப்போகின்றான்.

(2) "போலவே... இவன் சொல்லவருவதும் நம்பத்தகாததாகவே இருக்கும்" என்று முடித்துக்கொள்க.

(3) உடைகள் கெடாமலிருக்கின்றனவென்று கன்ஸாலோ சொல்வது பொய் யென்று மறுக்கின்ற அன்டோனியோ, "நம் எல்லோருடைய சட்டைப் பைகளிலும் மணல் நிறைந்து கிடக்கின்றது; இவன் சட்டைப்பை பேசக் கூடுமானால், "ஏனையா பொய் சொல்கின்றாய், இதோபார் எவ்வளவுமணல்எனக்குள்ளே புகுந்துகொண்டிருக்கின்றது" என்று கூறுமே—என்கின்றான்.

(4) அதற்கு ஸபஸ்ட்டியன், "ஆம் சொன்னாலும் சொல்லும்; அல்லது அவன் சட்டைப்பையும் அவனைப்போன்றே பொய்யுடையதாயின், மணலைக் காட்டி மறுக்காமல், அவன் பொய்யையும் வாங்கித் தனுக்குள்ளே (பைக்குள்ளே) போட்டுக்கொண்டு சும்மா இருந்துவிட நேர்ந்தாலும் நேரலாம்—என்கின்றான்.

(5) அலான்ஸோவின்மகள், க்ளாரிபெல்; இவளைக் கொண்டுபோய், ஆப்ரிக்காவில் உள்ள ட்யூனிஸ் என்னும் நகரத்து அரசனுக்குக் கலியாணம் செய்துகொடுத்துவிட்டுத் திரும்பும் வழியில்தான், இந்தச்சம்பவங்கள் நிகழ்கின்றன. அந்தக் கலியாண தினத்தன்று புதிதாக எடுத்து அணிந்துகொண்ட இவ்வாடைகள், கடலில் நனைந்தும் புதுமை கலையாமல் அப்படியேயிருக்கின்றன—என்கின்றான் கன்ஸாலோ.

(6) மீளுங்கால் தமக்கு இவ்வளவு இடுக்கண்கள் நேர்வதற்குக் காரணமாயிருந்த அக்கலியாணத்தை இகழ்கின்றான்.

(7) ட்யூனிஸ்—என்பது இட ஆகுபெயராய் ட்யூனிஸ் நகரவாசிகளைக் குறிக்கின்றது. இதுகாறும், அவர் க்ளாரிபெல்லைப்போல் அவ்வளவு சிறப்புவாய்ந்த அரசியைப் பெற்றதில்லை—என்று ஏட்ரியன் பாராட்டுகின்றான்.

(8) டைடோ, என்பவள், தனது புருஷனை இழந்தபின், கார்த்தேஜ் என்னும் நகரத்திற்கு அரசியாயிருந்தாள். இவள் உண்மையில் விதவைதான் ஆயினும், "விதவை டைடோ," என்று அவளை இப்பொழுது குறிப்பது மிகவும் அசட்டுத்தனமாகும். ட்ராய் நகர மன்னனது மை

ஸபாஸ்ட்டியன்:—"விதுரன் ஈனியஸ்" என்று அவன் சொல்லியிருந்தாலுந்தான் என்ன? ஏ, அப்பா, உனக்கேன் இத்தனை சலிப்பு. (10)

எட்ரியன்:—விதவை டைடோவையா சொல்லினை? இதுபற்றி நீ என்னைச் சிந்திக்கச்செய்கின்றாய். அவள், ட்யூனிஸ்ஸை அன்று, கார்த்தேஜ்ஜைச் சேர்ந்தவள். (11)

கன்ஸாலோ:—இந்த ட்யூனிஸ்தான், ஐயா, கார்த்தேஜ் (12)

எட்ரியன்:—கார்த்தேஜா!

கன்ஸாலோ:—நிச்சயம், கார்த்தேஜ்!

அன்டோனியோ:—அவ் அற்புத யாழினும் அதிகமாயது இவன் வார்த்தை. (13)

ஸபாஸ்ட்டியன்:—மதிலோடு இவன் மனைகளையும் எழுப்பிவிட்டான். (14)

அன்டோனியோ:—செயற்கரியகாரியம் இனி எதனை இவன் எளியதாக்கப் போகின்றானோ?

ஸபாஸ்ட்டியன்:—இந்தத் தீவைத் தன் பையிற் போட்டுக்கொண்டு ஊரிற்குப்போய்த் தன் பிள்ளைக்கு ஓர் ஆப்பிள் பழமெனக் கொடுப்பான் என நினைக்கின்றேன்.

அன்டோனியோ:—அதன் கொட்டைகளைக் கடலிலே விதைத்துப் பின்னும் பல தீவுகள் பிறப்பிப்பான்.

கன்ஸாலோ:—என்ன? (15)

அன்டோனியோ:—நல்லது, சரியான காலத்தில். (16)

கன்ஸாலோ:—ஐயனே, உன் புதல்வியின் வதுவைக்கு ட்யூனிஸில் நாம் இருந்தபோது இருந்தது போன்றே நமது ஆடைகள் இப்பொழுதும் புதியனவாகவே இருக்கின்றன வென்று உரையாடிக்கொண்டிருந்தோம். இந்நாள் அவள் அரசியாயிருக்கின்றாள்.

அன்டோனியோ:—அங்கு அடைந்தவர்கள் அனைவரிலும் தன்னேரில்லாத் தகையளு மாவாள். (17)

ஸபாஸ்ட்டியன்:—வேண்டிக்கொள்கின்றேன், விதவை டைடோவைத் தவிர. (18)

அன்டோனியோ:—ஓ, விதவை டைடோ; ஆம், விதவை டைடோ. (19)

கன்ஸாலோ:—எனது இவ்வங்கி, ஐய, முதல்நாள் அணிந்தது போன்றே புதியதாயிருக்கவில்லையா? அதாவது,...ஒரு மாதிரி. (20)

அன்டோனியோ:—அந்த 'மாதிரி' மிகவும் நன்றாகத் தேடிப் பிடிக்கப்பட்டது. (21)

கன்ஸாலோ:—உன் புதல்வியின் கலியாணத்தில் நான் அணிந்திருந்தபோது? (22)

அலான்ஸோ:—என் உணர்வின் வயிற்றிற்கு மாறாக இவ்வார்த்தைகளை என் காதுகளிற்குள் திணித்து கின்றாய் நீ. (23). என் மகளை நான் அங்குக் கலியாணம் செய்துகொடுக்காமலே இருந்திருந்தலாகாதா! அங்கிருந்து வருங்கால் என் மைந்தனை இழந்தேன், அவளையும் இழந்தேனென்றே கணிக்கிறேன். இட்டலியிலிருந்து அத்தனை தூரத்திற் கப்பால் அகற்றப்பெற்றிருக்கின்ற அவளை நான் மீண்டும் காண்பேனல்லேன். ஓ, நேப்பல்ஸையும் மிலானையும் எனக்குபின் அடைய நின்றோய், எந்தப் புதிய மீன் உன்னை உணவுசெய்துகொண்டதோ!

தன், ஈனியஸ் என்பவன், கிரேக்கர்களுடன் நிகழ்ந்த போரில் தோற்று, தன் மனைவியையும் இழந்து, தேயம் தேயமாகத் திரிகையில், அந்த டைடோ அரசுசெய்திருந்த கார்த்தேஜ் நகரத்திற்கு வந்தபோது, இவன்மீது அவள் காதல்கொண்டு, பிறகு இவன் அவளைக் கைவிட்டு அகன்றதற்கு ஆற்றாமல், உயிரோடு சிதையேறித் தீக்குத்துக் கொண்டு மாய்ந்தனள்—இக்கதை, வர்ஜில் என்னும் புலவர் 1500 வருடங்களுக்கு முன்னால் லத்தீன் பாஷையில் எழுதியுள்ள ஒரு காவியத்தில் காணப்படுகின்றது.

"க்ளாரிபெல்லைப்போல் சிறந்த அரசி இதன்முன் ஒருபோதும் ட்யூனிஸிற்கு வாய்த்ததில்லை' என்று எட்ரியன் கூறியதைக் கன்ஸாலோ, "அவ்வாறன்று; இதன் முன் ஒருபோதும் வாய்த்ததில்லை என்னலாகாது? டைடோ வென்னும் அரசி முன்னொரு காலத்தில் அங்கு இருந்திருக்கின்றாள். அவளும் தன்னேரில்லாத் தகைமை சான்றவளே; ஆகலின் அவள்காலத்திற்குப் பிறகு, நம் க்ளாரிபெல் அரசியாகின்ற வரையில், ஒருத்தியும் வாய்த்ததில்லை என வேண்டுமாயின் கூறலாம்"—என்று திருத்துகின்றான்.

(9) டைடோ, என்றாற் போதாதா! விதவை என்பதை அவளுக்கு அடைமொழியாய்ச் சேர்த்துக்கொள்வானேன். கல்வியாளனைப் பற்றிப் பேசும்போது அந்த அமைச்சன் சொல் என்கிருந்து வந்தது,—என்று அந்தச் சொல்லை எடுத்துப்போய் கன்ஸாலோவை இகழ்ந்து பரிகசிக்கின்றான்.

(10) விதுரன்—மனைவியை இழந்த ஆடவன். டைடோவை விதவை என்றதற்கேற்ப, ஈனியஸ்ஸை, அவனும் மனைவியை இழந்திருப்பவனாதலால், 'விதுரன் ஈனியஸ்' என்று குறித்தாலும் குறிப்பான்—நீ யார் கேட்க—என்று பரிகசிக்கின்றான்.

(11) க்ளாரிபெல், மணந்து இப்பொழுது இருக்கும் நகரம் ட்யூனிஸ். டைடோ இருந்த நகரமோ கார்த்தேஜ் ஆகையால், டைடோவிற்குப் பிறகே க்ளாரிபெல் சிறந்தவளாயினாள், என்று நீ கூறுவது எவ்வாறு பொருந்தும்—என்பது பொருள்.

(12) கன்ஸாலோ தன் பிழையை அறிந்தானாயினும், அதைக் காட்டிக்கொள்ளாமல், இரண்டுநகரமும் ஒன்றேதான் என்று 'வாயடி' அடிக்கின்றான்.

(13), (14) கார்த்தேஜ், என்பது பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே அழிந்து இருந்தவிடம் தெரியாமற் போய்விட்டது. ட்யூனிஸ் நகரம் இப்பொழுதும் இருக்கின்றது. கார்த்தேஜ்தான் ட்யூனிஸ் என்று கன்ஸாலோ கூறினமையால், அழிந்துபோன அந்நகரத்தை மீண்டும் தன் ஒரு வார்த்தையால் இருக்கும்படி செய்துவிட்டான். இது அந்த அற்புத யாழினும் அதிகம் அற்புதமாயிருக்கின்றது—என்று இவ்விருவரும் பரிகசிக்கின்றனர். ஆம்பியன், என்பவன் ஒருவன் தன்கை யாழினை இசைக்க, அதன் இனிமையில் ஈடுபட்டுக் கல்களெல்லாம் தாமாகவே அடுக்கிக்கொண்டு தீப்ஸ் என்னும் நகரத்தின் மதிற்சுவர் ஆயினவென்றும், அவ்வாறே மற்றோர்முறை அப்போலோ என்னும் கடவுள் தன் யாழினை மீட்டியே ட்ராய் என்னும் நகருக்கு மதிற்சுவர் எழுப்பித்தந்தான் என்றும், மேல்நாட்டுப் பண்டைப் புராணங்கள் கூறும். அந்த யாழ்கள், மதிற்சுவர்மாத்திரம் எழுப்பித்தர, இவன் கார்த்தேஜின் மதிற்சுவரோடு அந்நகரத்தின் மனைகள் முதலிய எல்லாவற்றையும், கார்த்தேஜ்தான் ட்யூனிஸ் என்ற ஒரு சொல்லால் ஒரு நொடியில் அமைத்து விட்டானே—என்பது இப்பரிகசம்.

(15), (16) கடைசியில் அன்டோனியோ பேசியது சிறிது தன் காதில் விழவே, கன்ஸாலோ, "என்ன சொன்னாய்" என்று கேட்க, அதற்கு அன்டோனியோ, "நல்லது, சரியான காலத்தில் சொல்கின்றேன்; இப்பொழுது கேட்காதே" என்று பதிற்சொல்லிக் கழிக்கின்றான்.

(17), (18), (19). முன் எட்ரியன் சொன்னபடியே கன்ஸாலோவும், க்ளாரிபெல்லினது சிறப்பைச் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டாவோ, எனப் பரிகசித்து அவன்விட்டதை அன்டோனியோ சேர்த்து மொழியவே, எட்ரியனை முன் கன்ஸாலோ திருத்தியது போலவே, ஸபஸ்ட்டியன், "விதவை டைடோவைத் தவிர, க்ளாரிபெல்லே சிறந்தவள் என்று நீ கூறும்படி வேண்டிக்கொள்கின்றேன்" எனவெடுத்துக் காட்டியவுடன், அன்டோனி

ப்ரான்ஸிஸ்க்கோ:—ஐயனே, அவன் உயிரோடிருக்கலாம். அலைகளை யவன் தன்கீழ் அடித்து அவைகளின் முதுகின்மேல் உதைக்க யான் கண்டேன். நீரின் பகையினை புறமே தள்ளி மிதித்து, பொங்கித் தன்னை எதிர்ப்பட்ட அலையினிற்குத் தன் மார்பினைக் கொடுத்தான். பொருதெழுந் திரைகளுக்கு மேலுறத் தன் அஞ்சாச் சிரத்தினைத் தாங்கி, திரை அரித்த தரையீ தெழுந்து அவனை வரவேற்க வணங்கியது போன்ற கரைவயின், நல்ல தன் கரங்களே துடுப்பாக, கொழுத்த அடிகளால் தன்னை உந்திக் கொணர்ந்தனன். உயிருடனே அவன் நிலத்தினை எய்தினனென்பதில் எனக்கோர் ஐயம் இல்லை.

யோவும், "ஆம், ஆம் மறந்தேன், விதவை டைடோவை மறந்தேன்" எனச் சேர்த்துக்கொள்கின்றனன்.

(20) முழுப்பொய் சொல்ல மனமில்லாமல் கன்ஸாலோ, "ஏதோ ஒரு மாதிரியாகவாவது புதியதாய்த் தோன்றவில்லையா" என முடிக்கின்றான்.

(21) முற்றிலும் புதிது என்னாமல், "ஒரு மாதிரியாக" என்று சொன்னது தக்கதே—என்பது பொருள்.

(22)......இருந்தபடியே இப்பொழுதும் இருக்கின்றதன்றோ?—என்று அந்தக்கேள்வியை முடித்துக்கொள்ள வேண்டும்.

(23) வயிறு கெட்டிருக்கும்போது அது ஒன்றினையும் ஏற்றுக் கொள்ளாமல் எப்படி வெறுக்குமோ, அப்படியே, துயரத்தால் கெட்டிருக்கின்ற என் உணர்வும் உன் சொற்களைக் கொள்ள மறுக்கின்றது—என்பது பொருள்

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

5-ம் பத்து 2-ம் தசகம்

[431-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்

நிறுத்திநும் முள்ளத்துக் கொள்ளும்
    தெய்வங்க ளும்மை யுய்யக்கொண்
மறுத்து மவனை கண்டீர்
    மார்க்கண் டேயனுங் கரியே
கறுத்த மனமொன்றும் வேண்டா
    கண்ண னல்லாற் றெய்வமில்லை
இறுப்ப தெல்லா மவன்
    மூர்த்தியா யவர்க்கே யிறுமினே.

உரை:—நும் உள்ளத்தில் நிறுத்திக் கொள்ளும் - உங்கள் மனதில் நிலைநிறுத்தி நீங்கள் வழிபடும் பிரம்மன் ருத்திரன் இந்திரன் முதலாய தேவதைகள்; உம்மை உய்யக் கொள்-உங்களை காப்பாற்றும் நிமித்தம், மறுத்தும் - நீங்கள் அவனில்லை யென்று மறுத்தாலும், அவனே - நாராயணனே, கண்டீர்-உங்கள் தெய்வங்கள் கொண்டுபோய் அந்த நாராயணனிடத்தே உங்களை இரக்ஷிக்க ஒப்புவிப்பார்கள். மார்க்கண்டேயனும் கரி - ருத்திரனை யடுத்த மார்க்கண்டேய ரிஷிக்கு யம பீடையை நிவர்த்திசெய்ய ஈசன் அந்த நாராயணனிடத்தில் ஸமர்ப்பித்ததுவே சாக்ஷி. கறுத்த மனம் வேண்டா - உங்கள் மனதில் இவ்விஷயத்தில் சந்தேகங்கள் வேண்டா. கண்ணன் அல்லது தெய்வம் இல்லை. இறுப்பது எல்லாம் அவனே - அந்த நாராயணனே அவர்களை அந்தர்யாமியாயிருந்து நடத்துபவன். அக்கினி இந்திரன் பிரம்மா ருத்திரர் இவர்களுக்கெல்லாம் பூஜைசெய்ய வேதங்கள் விதிக்கவில்லையோ என்றால், இவர்களுக்கெல்லாம் சரீர பூதனை பரமாத்மாவே எல்லா வேத கர்மங்களாலும் ஆராதிக்கப்படுகிறவன் ஆகையால் நீங்களும் நேராகவே ஸமஸ்த தேவதாந்தர்யாமியான பரம புருஷனை யாச்ரயிங்கோள்.

8-ம் பாசுரம்

இறுக்கு மிறையிறுத் துண்ண
    வெவ்வுலகுக் குந்தன் மூர்த்தி
நிறுத்தினன் றெய்வங்க ளாக
    வத்தெய்வ நாயகன் றானே
மறுத்திரு மார்ப னவன்றன்
    பூதங்கள் கீதங்கள் பாடி
வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார்
    மேவித் தொழுதுய் மினீரே.

பதக்குறிப்புக்கள்:-இறுக்கும்-வழிபாடாகக்கொடுக்கும்; இறை-அவரவர்களுக்குக் கிடைக்கும் நிவேதன திரவியங்களை, இறுத்து உண்ண-வாங்கிஉண்ண, தெய்வ நாயகன்தானே தன் மூர்த்தி-தன்னுடைய மூர்த்திகளை, அதாவது ஸ்வசரீர பூதனை இந்திராதிதேவதைகளை; நிறுத்தினன்-பலம் கொடுக்கும்படி ஏற்படுத்தினன், (அவன்) மறு திருமார்பன்-ஸ்ரீவத்ஸம் என்கிற மறுவைத் திருமார்பில் உள்ளவன்-(இம்மறுவை வேதாந்திகள் ஜீவாத்ம கோடி என்பர்) தன் பூதங்கள் பாடி-வைஷ்ணவர்களான பக்தர்கள் பாடி, வெறுப்பின்றி - சந்தோஷமுள்ளவராய், ஞாலத்து - பூமியில், மிக்கார்-பெரும்பாலுமானார்கள். நீங்களும் எம் பெருமானையே மற்ற வைணவர்களைப்போல் ஆதரித்து, உய்மின் - உஜ்ஜீவியுங்கோள்.

9-ம் பாசுரம்

மேவித் தொழுதுய் மினீர்கள்
    வேதப் புனித விருக்கை
நாவிற்கொண் டச்சுதன் றன்னை
    ஞான விதி பிழையாமே
பூவில் புகையும் விளக்கும்
    சாந்தமும் நீரும் மலிந்து
மேவித் தொழுமடி யாரும்
    பகவரும் மிக்க துலகே.

தாத்பரியம்:--இவ்வுலகில் எம்பெருமானது தாஸர்களும் பக்தர்களும் மிகுந்திருக்கிறார்கள், அவர்களைப் போலவே, நீங்களும் வேத இருக்குக்களைச் சொல்லிக் கொண்டு பூஜைக்குள்ள விதி பிழையாமே தூபம்தீபம் நீர் சாந்து இவற்றைச் சமர்ப்பித்துப் பரம புருஷனது குணவிசேஷ விவகாரங்களில் ஈடுபட்டு மற்றுள்ள பக்தர்களைப் போலவே அவனது பிரீதிக்காகவே அவனையே ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோள்.

10-ம் பாசுரம்

மிக்க வுலகுகள் தோறும்
    மேவிக் கண்ணன் திருமூர்த்தி

நக்கப் பிரானோ டயனு
மிந்தி ரனுமுத லாகத்
தொக்க வமரர் குழாங்க
ளெங்கும் பரந்தன தொண்ட
ரொக்கத் தொழுகிற்றி ராகில்
கலியுக மொன்று மில்லையே.

அவதாரிகை:—தேவதாந்தர சபலமுடைய அந்நிய பக்தர்களை நோக்கி, வைஷ்ணவ ஜனங்கள் பக்தர்களாயும் தாஸர்களாயும் எங்கும் வியாபித்திருக்கிறார்கள், அவர்கள் போல நீங்களும் செய்யலாகாதா வென்று சென்ற பாசுரத்தில் புத்திமதி கூறினார். இப் பாசுரத்தில், தேவதைகளை எம்பெருமானைத் தொழுது அவனது பிரஸாதத்தால் ஐசுவரியம் அடைந்தார்கள் ஆகையால் நீங்களும் பெரியவர்கள் அநுஷ்டானத்தைக் கண்டு திருந்துங்கோள் என்கிறார்.

பொழிப்புரை:—பிரம்மா ஈசன் இந்திரன் முதலான தேவர்கள் (பரமபுருஷனை) ஸ்ரீ கிருஷ்ண திவ்விய மூர்த்தியை ஆதரித்து ஸமஸ்தமான உலகங்கள் தோறும் ஆட்சிபெற்று உயர்ந்தார்கள் - ஆன பின்பு நீங்களும் அவனையே அவர்களுடன் சேர்ந்து தொழுவதற்கு வல்லவர்களானால் உலகத்தில் கலியுகப் பிரசாரம் நின்றுபோம். எல்லாரும் சாத்விக பிருகிருதிகளாய்விடுவார்கள்.

11-ம் பாசுரம்

கலியுக மொன்று மின்றிக்கே
தன்னடி யார்க்கருள் செய்யு
மலியுஞ் சுடரொளி மூர்த்தி
மாயப்பிரான் கண்ணன் றன்னைக்
கலிவயல் தென்னன் குருகூர்க்
காரி மாரன் சடகோபன்
ஒலிபுக ழாயிரத் திப்பத்
துள்ளத் தைமா சறுக்குமே.

பதக்குறிப்புக்கள்: — மலியும்சுடர் - அதிகரிக்கும் சோபை. ஒளிமூர்த்தி - தேஜோமயமான விக்கரஹ விசிஷ்டன்; கலிவயல் - உழுகின்ற காளைகளும் பயிராளிகளும் கலந்து ஆரவாரமாயிருக்கிற வயல். உள்ளத்தை மாசறுக்கும்—வைணவர் ஆகவிடாமல் தொல்லைசெய்யும் பாபங்களைப் போக்கி மனத்தைச் சுத்திசெய்யும்.

விசேஷக் குறிப்பு:—சென்ற தசகத்தில், ஆழ்வார் தம் மனதிலுள்ள மாசறுத்துக் கூவிக்கொள்ள வேணுமென்று யாசித்தார். எம்பெருமான் கிருபாபரவசனாய் அப்படியே செய்தான். தன் னடியார்பொருட்டு எம்பெருமான் உலகத்திலுள்ள பாபங்களையும் போக்குவானென்று சொல்லி இத்தசகத்தை முடிக்கிறார்.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[436-வது பக்கத் தொடர்ச்சி]

தூ

1306 தூக்குப் பாட்டுக் கூத்துந் துலாமும்
தொங்கலுங் குணமு மாராய்தலும் நிறுத்தலும்
தூக்கணமு முறியு மாசா ரியனும்.
1307 தூங்கல் தாழ்வும் யானையுஞ் சோம்பும்
துயிலு மோசையுந் தராசும் கூத்தும்.
1308 தூசு தூசிப் படையு மாடையும்
யானைப் புரசையு நவிற்றுவர் புலவர்.
1309 தூணி யாவமு முகத்தற் றூணியும்.
1310 தூணம் பகையுந் தூணு மாகும்.
1311 தூதுணம் புறவுந் தூக்கணங் குருவியும்.
1312 தூபம் தூபமு நீர்க்கடம்பு மாகும்.
1313 தூம்பு வேயுந் துளையுடைப் பொருளும்
மரக்காலும் பூளையும் சலதாரையும்.
1314 தூய்மை மெய்ம்மையுஞ் சுத்தமு மாகும்.
1315 தூரியமு மிடமும் வாச்சியமுந் துகிலும்
எழுது கோலு முரசும் போரெருதும்
எறிபடையு மீயமு மியம்ப லாகும்.
1316 தூவி புள்ளிறகு மன்னத் தூவியும்
பசையுந் தசையும் பல தூவிகளும்.
1317 தூவல் திவலையு மாரியு மாகும்.
1318 தூளி யார்ப்புங் குதிரையும் புழுதியும்.
1319 தூவரித்த புலாலும் பற்றுக் கோடும்
தூய்மையும் பசவும் பகையு மூனும்
வெண்மையுஞ் சிறகும் விளம்ப லாகும்.

தெ

1320 தெக்கணந் தெற்குஞ் சூழ்தலு மாகும்.
1321 தொட்டி யானையுஞ் செட்டியு மாகும்.
1322 தெண்டிகை ஆர வாரமும் தெவ்வமும்
உள்ளமு மெனவே யுரைக்க லாகும்.
1323 தெய்யே [1] தெய்வமுங் கொலையு மாகும்.
1324 தெயம் [2] வாசமும் புத்தேளு மாகும்.
1325 தெரிவை பெண்ணுங் கன்னி ராசியும்
1326 தெவிட்டனிறைதலுங்கான்றலு மொலித்தலும்
அடைத்தலு மெனவே யறைய லாகும்.
1327 தெவ்வே பகையுஞ் செருவுங் கொள்கையும்.
1328 * தென் னாளிகேரமும் மிசையும் வனப்பும்
கற்புந் தெற்குங் கழறினர் புலவர்.

தே

1329 தேள் விருச்சிகமு மனுட நாளும்.
1330 தேக்குத் தேக்கும் வெறுப் புங்கமுகும்
தெவிட்டலு மெனவே செப்ப லாகும்.
1331 தேசி பரியு நாயு மாகும்.
1332 தேசிக மழகுங் காந்தியுந் திசைச்சொல்லும்
கூத்தும் பொன்னும் கூற லாகும்.
1333 தேசிகன் றேசாந் திரியுங் குருவும்
வணிகனு மிறைவனும் வழங்க லாகும்.
1334 தேடல் பொன்னுந் தேடலு மாகும்.
1385 தேமென்ப திடமு நாற்றமுந் திசையும்.
தித்திப்புந் தேசமுந் தேனுங் கள்ளும்.
1336 தேயம் விண்ணு முடலு நாடும்
களவு மெனவே கருதினர் புலவர்.
1337 தேர்த லாராய்தலுங் கொள்கையு மாகும்.

* இச் சூத்திரம் 'தேள்விருச் சிகமும்' என்பதன் பின்.
(பி - ம்) 1. தெய்வமும். 2. பாசமும்.

1338 தேவு தேறலுந் தெய்வமு மாகும்.
1339 தேனே வண்டு நறவு மாகும்.

தை

1340 தைத்தல் துன்னமுந் தைக்கலு மாகும்.
1341 தையல் பெண்ணு மழகு மாகும்.
1342 தைதை மாதமு மூலியுந் தைத்தலும்
அலங்கலுங் கள்ளு மறைய லாகும்.

தொ

1343 தொங்கல் பீலியும் பீலிக் குடையும்
மாலையுங் குஞ்சமுந் தூக்கும் வெண்குடையும்
பங்கியுந் தூக்கமும் பகர லாகும்.
1344 தொட்டி வாய்தலுந் தொட்டியுங் கள்ளும்.
1345 தொடி கங்கணமும் வளையுமொரு பலமும்.
1346 தொட்டல் கை தீண்டலுந் தோண்டலு முண்டலும்.
1347 தொடுத்தல் வளைத்தலும் பிணித்தலும் பற்றலும்
சொற்கூட் டலுமெனச் சொல்ல லாகும்.
1348 தொடுப்பு கோணலு [3] முழவு மாகும்.
1349 தொடை பாவுறுப்பு மாலையுங் கணையுஞ்
சொல்லுந் தொடர்புந் தொங்கலு மாகும்.
1350 தொண்டு வழிபாடு மொன்பதுஞ் சுருக்கும்
பழமையு மடிமையும் பகர லாகும்.
1351 தொண்டை யானைத் துதிக்கையு மிடறும்
கொவ்வையு மெனவே கூற லாகும்.
1352 தொண்டிகை வாச்சியமு மணிகலனு மாகும்.
1353 தொத்து பூங்கொத்துந் தொண்டு மாகும்.
1354 தொய்யி லழகு முழவுஞ் சேறும்
துயரமுங் குழைவு மெழுதலு மின்பமும்
தொய்யிற் புதலுஞ் சொல்ல லாகும்.
1355 தொழுவி ரேபதியும் கோயு முழலையும்
தோழமுந் தொழுதி டென்றலுஞ் சொல்லும்.

(பி - ம்.) 3. முளவு.

1356 தொழுதல் [4] வளைதலுந் தாழ்தலு மாகும்.
1357 தொழுதிபுள் ளொலியுங் கூட்டமு மாகும்.
1358 தொறு ஆனிரையுந் தோழமுந் தொகுதியும்
அடிமையு மெனவே யறைய லாகும்.

தோ

1359 தோகை தொங்கலும் வாலு மயிலும்
பெண்ணுஞ் சுற்றாலும் பேச லாகும்.
1360 தோடு தொகுதியும் பூவி னிதழும்
[5] பனையி னிதழுங் குன்று மனையுமாம்.
1361 தோடிரியங் கூத்தும் வாச்சியமு மாகும்.
1362 தோட்டி யங்குசமுங் கபாடமுந் தோட்டியும்.
1363 தோணி நீருங் கடைநாளுந் தெப்பமும்
தொளியு மம்பு மதிலுறுப்பு மாகும்.
1364 ‡ தோண்டல் முகத்தலும் அகழ்தலு மாகும்.
1365 தோமரம் வாச்சியமு மோரா யுதமும்.
1366 தோரை கைவரையும் பொன்னூலும் வேயும்
நெல்லின் விகற்பமு மரிசியுந் தூம்பும்.
1367 தோல்தோற் பலகையுந் தோல்வியுந் துருத்தியும்
யானையும் வனப்புஞ் சொல்லு மாகும்.
1368 தோரணங் கவியு நிலைத்தேரு மாகும்.
1369 தோழி யறக்கும் பாங்கியு மாகும்.
1370 தோள்புயமுந் துளையும் தூங்கிய கையும்.
1371 தோற்றல் வலியும் பிறப்புந் தோன்றுதலும்
தோல்வியும் புகழுஞ் சொல்ல லாகும்.
1372 தோற்ற முண்டாக்கலும் எற்றமும் பிறப்பும்
ஆற்றலு முயர்ச்சி[யுங்] காண்டலும் புகழும்.
1373 தோன்றல் முல்லைத் தலைவருஞ் சேயும்
நாதனு மெனவே நவில லாகும்.

‡ இச் சூத்திரம் சில பிரதிகளில் இல்லை.
(பி - ம்.) 4. வளைத்தலுந் தாழ்த்தலு.
5. பனையுமிதழுங்.

தமிழ்ப் பாடம் 73.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[427-வது பக்கத் தொடர்ச்சி]

நாடுதுறந்து, மக்களையும் பிரிந்து செல்வமெல்லாம் இழந்து காட்டில் திரிகின்ற நிலையில் இருந்த தமயந்தி தன் நாயகனைப் போய் ஓர் பொற்புள்ளைப் பிடித்துத் தரச்சொன்னதால், அவள், "தேன்பிடிக்குந் தண்துழாய்ச் செங்கண் கருமுகிலை மான் பிடிக்கச் சொன்ன மயிலேபோல்" ஆயினாள் என்று முன் புகழேந்திப்புலவர் காட்டினார். வீமன்மகள், ஜனகன்புதல்விக்கு ஒப்பாவது அவ்வொன்றினால் மாத்திரமேயன்று. கைகேசி சொற்கிணங்கிவனம்புகப்புறப்பட்ட இராமனோடு சென்ற சீதை, அயோத்திநகரத்தின் மதிலினது கடைவாயிலைக் கடந்தவுடன் தன் நாயகனை நோக்கி, "நாம் அடையவேண்டிய கானம் எது" என்று கேட்டாள் என்பது, பின் இராமன் அநுமனிடத்தில் சொல்லியனுப்பிய அடையாளங்களி லொன்றினால் தெரிய வருகின்றது. அவ்விதமே தமயந்தியும் விதர்ப்பநாட்டிலிருந்து தேர் ஏறினளோ இல்லையோ என்னு முன்னம் நளனை, "நம் மாவிந்தநகரத்திற்கு, 'ஏனை நெறித் தூரம் இனி எத்தனை'' எனக் கேட்டனள். சீதைக்கு இராமன் சொல்லிய பதில் என்னவென்பது தெரியவில்லை. நளனோ தமயந்திக்கு, "இந்த மலையுங்கடந்து அதற்கப்புறம் இருக்கின்ற ஏழுமலைகளையும் கடந்துவிட்டால், பின் மாவிந்தம் அடுத்த அடி" என்று விளையாட்டாகக் கூறினான். அவ்வெட்டு மலைகளையும் ஓர் இரவிலேயே கழித்து நிடததேசம் சென்றடைந்த நளன் ஒரு சோலையில் தங்கியிருந்து புஷ்கரனை மறு சூதிற்கழைக்கவும், அவன் வந்து இவனைச் சந்திக்கலாவதை அடுத்த நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

இக்கங்குல் போக விகல்வே னளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு—புக்கங்
கிருக்குமா காண்பான்போ லேறினன் குன்றில்
செருக்குமான் றேர்வெய்யோன் சென்று. 84

பொழிப்புரை:—இந்த இரவு கழியவும், பகையையுடைய வேலாயுதத்தையுடைய நளன், அலை எறிகின்ற நீர் அங்கு வயலில் பாயும் அழகிய நாட்டை அடைந்து அங்கு இருக்கின்ற பெருமையைக் காண வேண்டுமென்னும் ஆசையை உடையவன் என்னும்படி சூரியன், களிப்புடைய குதிரைகளையுடைய தன் தேரில் விரைந்துவந்து உதயகிரியில் ஏறினன்.

குறிப்புரை:-என்றைக்கும்போல் இயற்கையாக உதிக்கின்ற சூரியன், அன்றைக்கு நளன் தன் நாடு மீண்டடையும் வைபவத்தைக்காணும் ஆசையால் வந்தான், என்று கதைக்குஒட்டிக் கவி தன்னுடைய குறிப்பைச் சூரியன்மேல் ஏற்றிச் சொல்வதால் இது தற்குறிப்

பேற்றவணி. தற்குறிப்பேற்ற அணியில் பலவகை உட்பிரிவுகள் இருப்பதை முன் கூறியிருக்கின்றோம். சூரியன் உதித்தது, நளன் இருந்ததைக் காணவேண் டும் என்னும் பயனைக் கருதிய குறிப்பினால் நிகழ்ந்த தென்று சொல்வதால், இது, பயன் தற்குறிப்பேற்ற வணியாகும். இனி, நளன் சோலையில் வந்து தங்கிய தும் சூரியன் உதயமானதும் ஆகிய இரண்டும் நிகழ் ந்தன. வாஸ்தவத்தில் அவ்விரண்டிற்கும் ஒரு சம் பந்தமும் இல்லாமற்போனாலும் அந்தச் சம்பந்தம் இருக்கின்றதென்று சொல்வதற்கு இங்கே இடம் உளது. ஆகையால் இது உளபுலப் பயன் தற்குறிப் பேற்ற அணியில் அமையும்.

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—சென்றடைந்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்தவொரு[நான்
பூவிந்தை வாழும் பொழில். 85.

பொழிப்புரை:—வாசனை பொருந்திய இளமை யாகிய பூமாலையை அணிந்த தமயந்தியும் மக்களும் தானும் ஒரு வெற்றிபொருந்திய அழகிய பெரிய தேர் மேல் ஏறிச்சென்று, மலர்களின் ஆச்சரியம் நிரம்பிய தும் மாவிந்தம் என்னும் வளப்பமுடைய நகரத்தைச் சூழ்ந்திருந்ததுமான ஒரு சோலையை அடைந்தான், நளன்.

மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணைய முளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவி ரென்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்டெரியற் றேர்வேந்தன் றான். 86

பொழிப்புரை:-குளிர்ச்சியாகிய மாலையை அணிந்த, தேரையுடைய வேந்தனாகிய நளன், “நான் வந்திருக் கின்றேனென்றும், மறுசூது ஆடுவதற்கு இப்பொ ழுது பந்தயப்பொருள் என்னிடம் இருக்கின்றதென் றும் சொல்லி அவனை அழைத்துவாருங்கள்” என்று தன்னுடைய சிறந்த தூதர்களைப் புட்கரன்பால் அனுப்பினான்.

மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டா னெதிர். 87

பொழிப்புரை:—வஞ்சனை மிகுந்த சூதாட்டத்தில் நளனுடைய செல்வங்களை யெல்லாம் முன் அபகரித்த கொடிய மனமுடைய புஷ்கரன், தூய்மையான வாச னையுடைய மலர்கள் நிறைந்த அழகிய சோலையில், பெருமை பொருந்திய சைனியங்கள் சூழப் பெண் ணன்னம் போன்ற நடையுடைய தமயந்தியுடன் இருந்த நளனை எதிரில் கண்டான்.

குறிப்பு:-சோலைவாய், என்பதிலுள்ள வாய் என்பது இடப்பொருளில் வந்த ஏழாம்வேற்றுமை யுருபு.

பெடைநடையாள், என்னும் தொடர் பெடை போன்ற நடையாள் என விரியும். ஆகையால் அது உவமத்தொகை.

இருந்தானை, என்பது வினையாலணையும் பெயர்; இரண்டாம் வேற்றுமை ஏற்றிருக்கின்றது.

இலக்கணம்

இதுவரையில் சொல்லிவந்த தொகைநிலைத் தொ டர்களெல்லாம், தொடர்ந்துவரும் அந்த இரண்டு சொற்களுக்கு நடுவிலே மாத்திரம், ஏதாவது உருபு மாத்திரமோ, உருபோடு சில சொற்களுங் கூடவோ, தொக்கு இருக்குந் தன்மையன. இவ்வாறு இடையி லே தொக்கு இருக்கும் உருபும் சொல்லும் அர்த்தம் பூர்த்தியாவதற்கு அவசியமானவைகளா யிருக்கும். மண்குடம், (மண்ணால் செய்த குடம்) என்ற தொட ரில் ஆல் என்னும் உருபும், செய்த என்னும் சொல் லும் தொக்கிருப்பது, மண் குடம் என்ற நிலைமொழி வருமொழிகளுக்கு இடையில்தான். இதனில் வே றொன்றும் தொக்கு இல்லை.

ஆனாலும், உம்மைத் தொகையில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் ‘உம்’ என்ற எண்ணுப் பொருளுடைய இடைச்சொல் தொக்கு இருப்ப தோடு வருமொழிக் கப்புறமும் ஒரு ‘உம்’ சேர்த்துக் கொள்ளவேண்டி இருக்கிறது. ‘இரண்டரை’ என்ற தொடர் உம்மைத்தொகை. அது ‘இரண்டும் அரை யும்’ என்று விரியும். ஆகையால், தொடர்கின்ற சொ ற்களுக்கு நடுவிலே ஒரு உம்மையும், தொடரின் இறுதியிலே ஒரு உம்மையும் மறைந்திருக்கக் காண் கின்றோம்.

“இப் புத்தகத்திற்கு நான் ரூபாய் ஒன்றரை கொடுத் தேன்” என்ற வாக்கியத்திலுள்ள ‘ஒன்றரை’ என் னும் உம்மைத்தொகைநிலைத் தொடரை ‘ஒன்றும் அரையும்’ என விரித்துவைத்தால் அவ்வாக்கியம் அப்படியே பொருள்படுவதற்குப் போதும். அவ் வாறின்றித் “தமிழில் உயிர்மெய் இருநூற்றுப் பதி னாறு” என்று சொல்லும்போது, ‘உயிர்மெய்’ என்ற தொகையை ‘உயிரும் மெய்யும்’ என்று மாத்திரம் விரித்துக்கொள்வோமானால் அவ்வாக்கியம் பொருள் படாது. “தமிழில் உயிரும் மெய்யும் இருநூற் றுப்பதினாறு” என்றால் என்ன அர்த்தம்? உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டுத்தானே. ஆகையால் ‘உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு’ என்பதில் உயிர் மெய் என்ற தொகை விரிந்தால் “உயிரும் மெய்யும் சேர்ந்து ஆகிய எழுத்துக்கள்” என வரவேண்டியது அவசியமாயிருக்கின்றது. விரிந்தால் அவசியமாக வரவேண்டிய சொற்கள், தொகைநிலைத் தொடரில் தொக்கு இருக்கின்றன என்று சொல்வோம். இந்தச் “சேர்ந்து,” “ஆகிய” என்ற சொற்கள் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் நடுவில் அல்லாமல் அத்தொடரின் இறுதியில் தொக்கு இருக்கின்றன. இவ்விதம் நடு விலே மாத்திரம் அல்லாமல் கடையிலும் ஏதேனும் சொற்கள் தொக்கு இருக்குமாயின் அத்தொகைக்கு **அன்மொழித் தொகை** என்று பெயர். அதாவது “நடுவிலே தொக்கு இருப்பவைகள் மாத்திரம் அல் லாமல் கடையிலேயும் மொழிகள் தொக்கு இருக் கின்றதொகை” என்பது அதன் அர்த்தம். “உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு,” அல்லது, ‘க’ என்பது ஓர் உயிர்மெய்”, என்பன போன்ற வாக்கியங்களிலிருக் கின்ற ‘உயிர்மெய்’, என்னும் தொகை உம்மைத் தொகை அன்று. அது அன்மொழித்தொகை. எனி னும் நடுவிலே தொக்கு இருக்கின்ற ‘உம்மை’ யைக் கருதும்போது அது உம்மைத் தொகையாகவும், இறுதியில் தொக்கு இருக்கின்ற “சேர்ந்து ஆகிய எழுத்து” என்று சொற்களைக் கருதும்போது அன் மொழித்தொகையும் ஆவதால், இதனை “**உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**” என்று அழைப்பர். வாக்கியத்தின் பொருளை ஒட்டி ஒரு தொகை உம்மைத் தொகையா அல்லது அன் மொழித்தொகையாஎன்று தேர்ந்து அறிந்துகொள்ள வேண்டும். ஒரு தொடர் ஒரு வாக்கியத்தில் உம்மைத் தொகையாயிருக்கும்; அதுவே வேறொரு வாக்கியத் தில் உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித்தொகையாகும். உதாரணம் ஒன்று பார்ப் போம். “வெற்றிலை பாக்கு வாங்கினான்” என்போமா யின், ‘வெற்றிலைபாக்கு’ என்னும்தொகை ‘வெற்றிலை யும் பாக்குஉம்’ என விரிந்து வாக்கியத்தில் “வெற் றிலையும் பாக்கும் வாங்கினான்” என்று பொருள்பட அமையும். இதனில் ‘உம்’ தவிர வேறொன்றும் தொக்கு இல்லையாகையால் இது உம்மைத்தொகை. ஆனால், “இது வெற்றிலைபாக்குக் கடை” என்போ மாயின் வெற்றிலையும் பாக்கும் என்பது மாத்திரமல் லாமல் ‘விற்கின்ற; என்ற வொரு சொல்லும் இறுதி யில் விரிந்து, “வெற்றிலையும் பாக்கும் விற்கின்ற கடை” என்று ஆகவேண்டிய அவசியத்தால் இங்கு ‘வெற்றிலைபாக்கு’ என்ற தொடர், உம்மைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ஆகின்றது.

யாப்பிலக்கணம்

[435-வது பக்கத் தொடர்ச்சி]

பாவினம்

ஆசிரியத் தாழிசை

நாற்சீரும் நான்குக்கு மேற்பட்ட பல சீருமுடைய அடி மூன்றாய்த் தம்முள் அளவொத்துத் தனித் தும், ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும் வரப்பெ றுஞ் செய்யுள் ஆசிரியத் தாழிசை எனப் பெயர் பெறும். தனித்தும் வருமாயினும், ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருதலே ஆசிரியத் தாழிசைக்குச் சிறப்பாம்.

ஒருசாராசிரியர், ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவனவற்றை ஆசிரிய ஒத்தாழிசை என்றும்; ஒரு பொருள்மேல் ஒன்றாயும், இரண்டாயும், மூன்று அடுக்கிப் பொருள் வேறாயும், மூன்றின் மிக்கும் வருவனவற்றை ஆசிரியத் தாழிசைஎன்றும் விகற்பித் துக் கூறுவர்.

வரலாறு

“சாருண் ஆடைச் சார்கோல் இடையன்
நேர்கொள் முல்லை நெற்றி வேய
வாரான் வாரான் எற்றே எல்லே ;

“அத்துண் ஆடை ஆய்கோல் இடையன்
நற்கார் முல்லை நெற்றி வேய
வாரான் வாரான் எற்றே எல்லே;

“துவருண் ஆடைச் சாய்கோல் இடையன்
கவர்கார் முல்லை நெற்றி வேய
வாரான் வாரான் எற்றே எல்லே.”

(இவை சிறப்புடை ஆசிரிய நேர்த்தளை பொருந் திய நாற்சீரடி பெற்று, ஒரு பொருள்மேல் மூன் றடுக்கி வந்த ஆசிரிய ஒத்தாழிசை.)

“ கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ!

“ பாம்பு·கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!

“கோல்லையம் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழீ!”

(இவை வெண்டளைபொருந்திய நாற்சீரடி பெற்று, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரிய ஒத்தாழிசை.)

நீடற்க வினையென்று நெஞ்சின் உள்ளி
நிறைமலரம் சாந்தமொடு புகையும் நீவி
வீடற்குந் தன்மையினன் விரைந்து சென்று
விண்ணோடு மண்ணினிடை நண்ணும் பெற்றி
பாடற்கும் பணிதற்கும் தக்க தொல்சீர்
பகவன்றன் அடியிணையைப் பற்றும் நாமே.”

(இது கலித்தளை பொருந்திய எண்சீர்க் கழி நெடி லடி பெற்று, ஒரு பொருள்மேல் ஒன்றாய்த் தனித்து வந்த ஆசிரியத் தாழிசை.)

“வானுற நிமிர்ந்தனை; வையகம் அளந்தனை;
பானமதி விடுத்தனை; பல்லுயிர் ஓம்பினை;
நீனிற வண்ண! நின் நிரைகழல் தொழுதனம்.”

(இஃது ஆசிரியத் தளை பொருந்திய நாற்சீரடி பெற்று, ஒரு பொருள்மேல் ஒன்றாய்த் தனித்து வந்த ஆசிரியத் தாழிசை.)

கலித் தாழிசை

அடி சிலவாயும் பலவாயும் அமைந்து, ஈற்றடி மிக்கு,ஏனையடி தம்முள் ஒத்து வருவனவும்; இரண் டடியாய் ஈற்றடி மிக்கு வருவனவும்; ஈற்றடி மிக்கு ஏனையடி தம்முள் ஒவ்வாது அருகி வருவனவும் **கலியோத் தாழிசை** என்றும்,**கலித் தாழிசை** என்றும் வழங்கப்படும்.

ஒரு பொருள்மேல் மூன்றாய் வருவனவற்றைக் **கலியோத்தாழிசை** என்றும்; ஒன்றாயும், இரண்டா யும், மூன்றின் மிக்கும், மூன்றாய்ப் பொருள் வேறாகி யும் வருவனவற்றைக் **கலித்தாழிசை** என்றும் பெயர் வேறு படுத்திச் சொல்வாரும் உளர்.

இவற்றுள் ஈற்றடி மிக்கு ஏனையடி ஒத்து வருவன வற்றைச் சிறப்புடைக் கலித்தாழிசை என்றும், ஒவ் வாது வருவனவற்றைச் சிறப்பில் கலித் தாழிசை என்றும், ஈறடியான் ஈற்றடி மிக்கு வருவனவும் சிறப் பில் கலித்தாழிசை என்றும் சொல்லுவர் ஒரு சார் ஆசிரியர்.

வரலாறு

“கோய்தினை காத்தும் குளவி அடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரல்நீ ஐய! நலம்வேண்டின்;

“ஆய்தினை காத்தும் அருவி அடுக்கத்தெம்
மாசில் சிறுகுடில் வாரல்நீ ஐய! நலம்வேண்டின்;

“மேன்றினை காத்தும் மிகுபூங் கமழ்சோ[illegible]
குன்றச் சிறுகுடில் வாரல்நீ ஐய! நலம்வேண்டின்!”

(இவை இரண்டடியாய், ஈற்றடி மிக்கு, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்தமையால், கலிப்பொத் தாழிசை.)

"வாள்வரி வேங்கை வழங்கும் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தின் எழால்வாழி வெண்டிங்காள்!
கேள்வரும் போழ்தின் எழாதாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்!"

(இஃது ஒரு பொருள்மேல் ஒன்றாய் ஈற்றடி மிக்கு ஏனையடி தம்முள் ஒத்து வந்தமையால், சிறப்புடைக் கலித் தாழிசை.)

"நிலமகள் கேள்வனும் நேர்கழலி னானும்
நலமிகு கச்சியார் கோ என்பவே;
நலமிகு கச்சியார் கோவாகி னானும்
சிலைமிகுதோள் சிங்கனவன் என்பவே;
செருவிடை பாணியவன் என்பவே."

"பூண்ட பறைபறையப் பூதம் மருள
நீண்ட சடையான் ஆடுமே;
நீண்ட சடையான் ஆடும் என்ப,
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே."

(இவை ஒரு பொருள்மேல் ஒன்றாய், ஈற்றடிமிக்கு, இரண்டாமடி குறைந்து, ஏனையடியிரண்டும் அளவு ஒத்து வந்த சிறப்பில் கலித் தாழிசை.)

வஞ்சித் தாழிசை

இருசீரடி நான்கு பெற்று, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவன வஞ்சித் தாழிசையாம்.

ஒருசாராசிரியர் ஒரு பொருள்மேல் மூன்றாய் அடி மறியாகாமல் வருவனவற்றை வஞ்சி நிலைத் தாழிசை என்றும்; அடி மறியாய் வருவனவற்றை வஞ்சி மண்டிலத் தாழிசை என்றும் வழங்குவர்.

வரலாறு

"இருப்பிடியை இகல்வேழம்
பெருங்கையால் வெயில்மறைக்கும்
அருஞ்சுரம் இறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்;
"மடப்பிடியை மதவேழம்
தடக்கையால் வெயில்மறைக்கும்
இடைச்சுரம் இறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்.
"பேடையை இரும்போத்துத்
தோகையால் வெயில்மறைக்கும்
காடகம் இறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்."

(இவை ஒரு பொருள்மேல் மூன்றாய் அடிமறியாகாமல் வந்த வஞ்சி நிலைத் தாழிசை.)

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[425-வது பக்கத் தொடர்ச்சி]

வசையுற வந்தோரு வாலும் வளர்ந்ததால்.

நின்றாலிம் மருகன்கொன்றான், மாயையால் வஞ்சிக்கச் சென்றாலத் தயரதன் செம்மல் கொன்றான்; எனின், என்செய்வான் மாரீசன். இருதலைக்கொள்ளி யெறும்புபோலாயினன் என்னல் இவனது நிலைமைக்கு ஏற்புடைத்தாகாது. தீ ஆறியபின் அவ்வெறும்பு உய்ந்துபோகலாம், அல்லது வேறொன்றின் உதவியால் அவ் விறகுவிட் டிறங்கிப் பிழைக்கலாம். மாரீசனுக்கோ இருவழியினும் இடையூறாளதென்பது மாத்திரமன்றி, அதனைக்கடந்து உயிருடன் மீள்தல் என்பது கருதுதற்கு மியலாததாய் நிற்கின்றது. இராவணனருகிலாயினும் இராகவன் எதிரிலாயினும் ஈரிடத்தும் இவன் முடிவதே திண்ணம். ஆதலின், மாரீசன்

வெஞ்சுற் றநினைந் திகும்வீ ரரைவே
றஞ்சுற் றமறக் குறமாழ் குழிநீர்
நஞ்சுற் றறமீ னினடுக் குறமா
னெஞ்சுற்றறதொர்பெற் றிநினைப் பரிதால்.

[கொடிய சுற்றத்தவனான இராவணனை நினைத்து வருந்துவான்; மற்று, வீரர்களாகிய இராம இலக்குமணர்களுக்கு அஞ்சிக் கலங்குவான். இப்படி, ஆழ்ந்த பள்ளத்திலுள்ள நீரானது விஷம் அடைந்துவிட அதனில் வசிக்கும் மீனைப்போல நடுங்குகின்ற இவனது மனம் எய்திய வோர் தன்மை இத்தகையதென்று நினைப்பதற்கும் இயலாது.]

எனக் கம்பர் வேறோருவமையால் விளக்க வருகின்றார். வசிக்கும் நீர் விடமாயிற்றெனின், மாள்வதல்லால் வேறு நெறி மீனிற்கில்லை. நீரிலும் சாவு, மற்று அதனைவிட்டுக் கரையைச் சேர்ந்தால் அதனினும் சாவே. அன்னதோர் மீனின் மனம் எவ்வகை மறுகும் அவ்வகையே மறுகலுற்றது, மாயமானாகி மாயவே வருகின்ற மாரீசன் மனம்.

இன்னவன், முதல்தப்பினால் மூன்றாம் முறை முடியுமெனும் அவ்வழக்கிற்கு இழுக்கிலாவகை,

அக்கா லெழும்வேள் வியினன் றிவனே
டெக்கா லுமலிந் தமொரீ றுபெறான்
முக்கா லின்முடிந் திடுவான் முயல்வான்
புக்கா னவிரா கவன்வை குபுனம்.

[விச்வாமித்திரனது யாகம் நடந்த அந்நாளிலும், பிறகு தண்டகாரணியத்தில் முன் னேர்முறை மானுருவம் எடுத்து மற்ற அரக்கர்களோடு எதிர்த்த காலத்திலும், ஆகிய இவ்விருபோதும் இராமனால் வருத்தப்பட்டானேனும், உயிர் முடியாத மாரீசன், மூன்றாம் முறையேனும் முடிவடைய முயன்றவனாகி இராகவன் தங்கிய வனத்தில் புகுந்தான்.]

புகுந்து, மின்னெனப்பொலியும் பொன்னின் மானுருவங்கொண்டு சீதையை நாடினனாகி, வஞ்சனை செய் விலைமாதரைக் காமுகர் தொடர்வதேபோல், கலைமான் அனைய கண்டவெல்லாம் ஆசையுற்றுத் தன்னைச் சார்ந்துவரச் சென்று சேர்தலும்,

பொய்யா மெனவோ துபுறஞ் சொலினு
னையா விடைநோ வநடந் தனளால்
வைதேகி தன்வால் வளைமென் கையெனுங்
கொய்யா மலரான் மலர்கொய் துறுவாள்.

[சீதையானவள், தனது தூய்மையான வளையல்கள் அணிந்த மெல்லிய கையாகிய கொய்யாத மலரினால், வனத்திலுள்ள மலர்களைக் கொய்பவளாகி, இவளுக்கு இடை உண்டென்பது பொய்யே என்று பிறர் புறங்கூறுகின்ற சொற்களைக் கேட்டுத் தளர்ந்த அவள் இடையானது பின்னும் வருந்தும்படி அங்கு நடக்கலுற்றாள்.]

சீதை, தனக்கு இடை உண்டென்று உரைப்பதெல்லாம் பொய்யாமே. ஒன்றினை இல்லை என்று மறுப்பது வேறு, பொய்யென்று புகல்வது வேறு. தனக்கிருப்பதை இல்லையென்றேனும், இல்லாததை இருக்கின்றதென்றேனும் ஒருவர் சொல்லிக்கொள்வது பொய்ம்மையாம். பொய்யாமை அன்னபுகழ் இல்லையாதலின், இத்தகைய பொய்யினைப் புகல்வதாகக் கூறுவதனினும் இகழ்ச்சி வேறில்லை. இங்ஙனம் பொய்யுடைத்தென்று சானகியின் இடையைப் புறங்கூறுவார் உளராயின், மானம் பெரிதுடைய அம்மருங்குல் நையாது என் செய்யும். மற்று அவ்வகைப் புறங்கூறுவார் யார்? சூர்ப்பணகை யல்லள்; ஏனெனில், மூக்கிலாதவள் என்று தன்னை மணங்கொள்ளத் தம்பி மறுப்பானாயின், "இறைவ, ஒன்று, மருங்கு இல்லாதவளொடும் அன்றோ நீ நெடுங்காலம் வாழ்ந்ததென்பாய்" என இராமனுக்கு இவள் எடுத்துக்காட்டிய செவ்வியில், சீதையின் இடை இல்லையெனச் சாற்றினளன்றி, பொய்யென்று புறங்கூறிய தன்மை இலது. மற்று, "பொய்யோ எனும் இடையாளொடு" இராமன் போயினன், என்று இன்னவாறு ஒருகால் புறங்கூறப் புக்கவர் கம்பர் தாமே. எனின், தன் சொல்லினாலேயே நைகின்றது இவள் இடை என நவில்கின்றார்போலும் இப்புலவர். தம்மால் பிறர்க்குவிளைந்த வருத்தத்தைப் பரிகசித்துத் தாமேநகுவர் புறங்கூறுமாக்கள். எனினும், நைந்த அவ்விடை பின்னும்நோவ நடப்பதோ இவள் என இக்கவிஞர் சிறிது இரங்கிப் பேசுகின்றனர்.

இடையோ பொய்யென்பதற்கே இன்னவாறு நைகின்ற சீதைக்குப் பேரிடர் இனி வருதற்குள பான்மையை மனத்துட்கொண்டு மாழ்குவார்போல், அப் பொய்ம்மானை,

உண்டா கியகே டுடையார் துயில்வாய்
எண்டா னும்மியைந் திடையா வுருவங்
கண்டா ரெனலாம் வகைகண் டனளால்
பண்டா ருமுறா விடர்பா டுறுவாள்.

[தீமை வந்தடையும் காலத்தை யடைந்தவர், சிறிதேனும் பொருந்தாத விபரீத உற்பாதத் தோற்றங்களைத் தூக்கத்தினிடையே கனவிற் கண்டால்போல, முன்பு யாரும் அடைந்திராத துன்பத்தை அடையகிற்கின்ற சீதை அந்த மானைக் கண்டாள்.]

எனச் சொல்லி, கண்ட வுருவம் உற்பாதமேனும் அதன்மீது இவள் காதல்கொண்டதற்குரிய காரணத்தையும் விரைவில் உரைத்துவிட வேண்டும் என்னும் கடமைபற்றி,

காணா விதுகை தவமென் றுணராள்
பேணா தநலங் கொடுபே ணினளால்
வாணா ளையிரா வணன்மா ளுதலால்
விணா ளினறம் புவிமே வுதலால்.

[இராவணனது ஆயுள் முடிவடைவதாலும், அவன் இறந்துவீழ்ந்த நாளிலிருந்து தருமங்கள் பூமியில் நிலைபெற வேண்டுவதாலும், மாயமானைக்கண்டு, அது வஞ்சனை என்று உணராமல், விரும்பத்தகாத அதன் அழகைக்கொண்டு விரும்பினாள்.]

என்று இயம்புகின்றனர் கம்பர். இராவணனுக்கு முன்னரே தன் வாழ்நாளை முடித்துக்கொள்வதற்கோர் மானாகிவந்த மாரீசனை,

நெற்றிப் பிறையாண் முனைநின் றிடலும்
முற்றிப் பொழிகா தலின்முந் துறுவாள்
பற்றித் தருகென் பெனெனப் பதையா
வெற்றிச் சிலைவீ ரனைமே வினளால்.

[பிறைச்சந்திரன் போன்ற நெற்றியையுடைய சீதையின் எதிரே அந்தமான் நின்றவுடன், முற்றி வழிகின்ற ஆசை மிகுந்தவளாகி, இதனைப் பிடித்துத் தரும்படி கேட்பேன் என்று பதைத்து, வெற்றி பொருந்திய வில்லை ஏந்திய இராமனை அடைந்தாள்.]

அடைந்து,

ஆணிப் பொனினா கிபதாய் கதிராற்
சேணிற் சுடர்கின் றதுதிண் செவிகால்
மாணிக் கமயத் தொருமா னுளதால்
காணத் தகுமென் றனள்கை தொழுவாள்.

[இராமனைத் தொழுது, ஆணிப்பொன்னால் ஆனதும், ஆய்ந்த கிரணங்களால் நெடுந்தூரம் பிரகாசிப்பதும், வலிய காதுகளும் கால்களும் மாணிக்கமயமாயிருப்பதும் ஆகிய ஒரு மான் இங்கு வந்திருக்கின்றது. அது உன்னால் பார்க்கத் தகுந்தது, என்றாள்.]

மாயமானைச் சீதை கண்டவளவில், அதனைப் "பற்றித்தருக என்பென்" எனப் பதைத்த உள்ளத்தளாய் இராமன்பால் துணிந்து வந்தாளேனும், முதலிலேயே அங்ஙனம் கேட்காமல், 'காணத்தகும்' என்ற வளவிலே மாற்றித் தணிவதற்குக் காரணம், அயல்நின்ற இலக்குவன்றன் முகத்தின்கண் தோன்றிய வெறுப்புடைக் குறிகளே ஆதல்வேண்டும். ஆயினும்,

இம்மா னிநிலத் தினிலில் லையென
எம்மா னிதெனச் சிறிதெண் ணல்செயான்
செம்மா னவள்சொற் கொடுதே மலரோன்
அம்மா னுமருத் தியனா யினனால்

[தேன் பொருந்திய தாமரையில் தோன்றிய பிரம்மனது தந்தையாகிய இராமனே, இம்மாதிரி மான் இவ்வுலகத்தில் இல்லை என்பதைச் சிந்தித்து, எந்தமான் இது என்று சிறிதும் ஆலோசனை செய்யாமல், செவ்விய மான் போன்ற சீதையின் சொற்களைக் கேட்டு அந்த மானின் பால் ஆசை வைப்பவன் ஆனான்.]

உந்திக்கமலத்தில் தானீன்ற அந்நான்முகன் முனைந்துசெய்த படைப்புப் பொருள்களை எல்லாம் கண்டுவந்த அம்மான், இன்று அம்மைந்தன் விளையாட்டாகக் கற்பித்த வோர் விந்தை மானுளதேல் அதனையுங் கண்டு வியக்க அவாக்கொண்டனனோ, அல்லது அப் பிரம்மதேவனை முன்னிட்டுப் பண்டைநாள் அமரரும் முனிவரும் கொதிகொள்வேல் அரக்கர் தம் கொடுமைகளைக் கூறி, "திருவின் நாயக உய்திறம் இல்லை" என்று உயிர்ப்புவீங்க, "தயரதன் மதலையாய்த் தான் புவியிடைவந்து அவர்துயர் களைவானெனக் கொடுத்த வாக்கை இம்மாயமான் நிறைவேற்றத் துவக்குகின்றதென்பதை நினைத்து அதனைக் காணுமோர் அருத்திய னாயினனோ அறிகிலேம். இலக்குவனும் அறிந்திலன் போலும்; ஆதலின்,

ஆண்டங் கிளையோ னுரையா டினனால்
வேண்டும் மெனலால் விளைவன் றிதெனன்
பூண்டுஞ் சுபொ[illegible]யதுகாங்
காண்டும் [illegible]வான்.

[நீவந்து காணவேண்டும் என்று சீதை சொன்னதும்; இது இயற்கையாக நேரக்கூடியது அன்று என்று மறுக்காமல், "ஆபரணங்கள் தங்கிய பொற்கொடி அனையவளே, நாம் போய்ப் பார்ப்போம், வா," என்கின்ற இராமனது கருத்தை உணரும்பொருட்டு, தம்பியாகிய இலக்குமணன் அப்பொழுது பின்வருமாறு சில பேசினன்.]

காயங் கனகம் மணிகால் செவிவால்
பாயும் முருவோ டிதுபண் பெனலான்
மானம் மெனலன் றிமனக் கொளவே
ஏயும் மிறையை யுறவென் றனவே

[பொன்மயமான உடலும், மாணிக்கமயமான கால்களும் காதுகளும் வாலும், பாய்ந்தோடுகின்ற வடிவமும் அதன் இயல்பு என்று இவள் கூறுவதால், அதனை மாயையே என்று எண்ணவேண்டுமே அல்லாமல், வேறு நம்புவதற்குச் சிறிது சந்தேகம் உண்டாகின்றது, என்று இலக்குவன் கூறிய அளவிலே]

இராமன் இதற்கு எதிர்உரைக்கப் புகுவானாகிப் புன்னகையுடன்,

நில்லா வுலகின் னிலைநேர் மையினால்
வல்லா ருமுணர்ந் திலர்மன் னுயிர்தாம்
பல்லா யிரகோ டிபரந் துளவால்
இல்லா தனவில் லையிளங் குமரா.

[இளமை பொருந்திய தம்பியே, நிலையற்ற இவ்வுலகின் தன்மையை நேராக மிக்க வல்லவர்களும் அறிந்திலர். நிலைபெற்ற ஜீவராசிகள்தாம் பல்லாயிரங் கோடிகளாகப் பரவி இருக்கின்றன; இல்லாதன இல்லை."]

என்று, முன்னொருகால் பொன்னொளியின் மேனியுடைய ஏழு அன்னங்கள் பிறந்திருந்தன என்பதையும் நினைவுபடுத்தி,

முறையும் முடிவும் மிலைமொய் யுயிரென்
றிறைவன் னிளையா னொடியம் பினனால்
பறையுந் துணையன் னதுபன் னெறிபோய்
மறையும் மெனவே மைழவருந் தினளால்.

[உலகத்தில் அடர்ந்துள்ள பிராணிகளுக்கு, ஓர் முறையும் இல்லை, முடிவும் இல்லை, என்று இராமன் இலக்குவனுக்குக் கூறினன்; "இவைகளைச் சொல்லிக்கொண்டிருக்கும் நேரத்திற்குள் அந்த மானனது பல வழிகளில் போய் மறைந்துவிடுமே", என்று சீதை வருந்தினள்.]

'இல்லாதன இல்லை' என்று இராமன் கூறிய இது தத்துவத்தின் இரகசியமோ, அல்லது பரிகசமோ, தேர்தலருமை. தான் கண்ட மானினது செவியுங் காலுமே மாணிக்கமயமாயிருந்தன வென்றுரைத்தனள் சீதை. இவள் மொழிகளாலன்றி அம்மானின் இலக்கணத்தை அறிதற்கியலா நிலைமையிலிருந்த இலக்குவன், "மணி கால் செவி வால்" என்று வாலையும் உடன் சேர்த்து மாணிக்கமாக்க எங்ஙனம் நேர்ந்தனன்? "இந்திரவில்லைப் போலப் பலவித வருணங்கள் பொருந்திய அதன் வால் உயர்த்தப்பட்டிருந்தது" என்றே வான்மீகர் கூறியிருப்பதால், அவ்வடநூலின் நினைவுபற்றி, இளையோன் வாயினுள் இங்கு வாலும் நுழைந்து மாணிக்கமாய் வழங்கிய தென்பதற்கில்லை. மற்று, சீதையும், வடநூன் முனிவரும் சொல்லாத வாலையுஞ் சேர்த்துச் சொல்லி, சிந்தனையும் இளஞ்சீற்றமும் தேங்கிய முகத்துடன் தடுக்கின்ற தம்பியைக் காண, மசரத மனையவர் வரமும் வாழ்வும் ஓர் நிசரத கணைகளால் நீறுசெய்து தன் அலகிலா விளையாட்டை நிகழ்த்த வந்திருக்கின்ற எம்பெருமான், "என்னை யறியாதார் இயம்புவதற்கு ஏற்றனவே இயம்புகின்றான் எம்பி" என்னும் புணர்ப்பினால் மென்னகை யரும்பி, "இலக்குவ, மற்றவெலாம் கிடக்க, சீதை குறிக்காத வாலை நீ எவ்வாறு கூறலாயினை? மான்கள் என்றிருந்தால், "வால் இல்லாதன இல்லை" என்னுங் கொள்கைகொண்டு அவ்வுறுப்பையுங் கூட்டிப் பேசினையோ" என அசதியாடியிருத்தல்வேண்டும் என்று கருதினாலும் இச்செய்யுளின் பொருளினின்று நெடுந்தூரம் விலகினவர்களாக மாட்டோம். அல்லது, "வால்போன்ற சில அதற்குச் சொல்லாமல் விட்டவைகள் இல்லாதனவாகி இல்லையேயொழிய அதனால் இத்தகையவொரு மான் முழுதுமே இல்லையெனக் கொள்ளலாமோ" என்றான் எனினும் ஒக்கும். அதுவுமன்றி, இளங்குமரனோடு கம்பரது கவியையுஞ்சேர்த்து இராமன் பரிகசித்தனனே என்று ஒரு வண்ணம் எண்ணவுந் துணியலாம்.

"பல்லாயிர கோடி பரந்துள. வால் இல்லாதன இல்லை" என்று பிரித்து உரைத்த இவை வம்பே. 'ஆல்' என்று அதனைப் பிரித்துக்கொள்ளலே முறைமை. எனின், அச்சொல், இங்கு, அசையாகவேனும், 'ஆதலால்' என்பதன் விகாரமாகவேனும், அமைதல் வேண்டும். அசைச்சொற்களைச் சேர்த்துச் சேர்த்துத் தன் கவிகளைக் காது புளிக்க நிரப்புகின்ற சிறுமை கம்பருக்கு இயல்பிலதாக, மாரீசன் வந்தது தோன்றியது முதல் இலக்குவன் இயம்பத் தவக்கின்றவரையிலும் செய்யுள் தோறும் "ஆல்" என்னும் அசை, "சமைந்தனால், நினைப்பரிதால், போயினனால், வந்தனவால், நடந்தனளால், கண்டனளால், பேணினளால், மேவினளால், மானுளதால், ஆயினனால், உரையாடினனால்," என்றென்று எண்கடந்துழன்று, செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞராம் அக்கம்பர்பாடிய செய்யுள்கள்தாமோ இவையென் றயிர்க்கும்வகை உருத்தெரியாமல் செய்துவிட்டது. இதுபற்றியே இராமன், "இளங்குமர, தம் செய்யுள்கள் நடப்பதற்கு ஊன்றுகோல்களாக அசைகளைப் பற்றாத நம் கம்பர் பாசுரங்களில், இப்பொழுது 'ஆல்' என்னும் அவ்வசை இல்லாதன இல்லை என்னும்படி நேர்ந்தன எனின், இவ்வற்புதமாகிய மான் ஒன்றுதான் உற்பாதமாக வேண்டுமோ" எனச் சாற்றினன் போலும். இவையல்லாமல் இன்னுமொன்று தோன்றுகின்றது. "இலக்குவ, 'ஆல்' இல்லாதன இல்லையென்றோ, நீ 'வால்' ஒன்றினைச் சேர்த்துக்கொண்டாய். அல்லது, 'ஆல்' என்னும் அசையே இலக்கணம் பிறழ்ந்து வகர உடன்படுமெய் பெற்று, 'கால்செவி வால்' என நின் கூற்றில் நின்றதோ. அல்லது, ஆலில்லாவிடத்து வாலேனும் வரட்டுமென்பது உன் எண்ணமோ," என்று இராமன், பற்பல உன்னிப் பன்னினனால். "நாராயணனை நராயண னென்பேன் நன்" எனக் கம்பரைப் பரிகசித்த அப்புலவரோடு தோழமை பூண்டதோர் புந்தியதா மிது.

இஃதனைய வம்புகள் கிடக்க, "இல்லாதன இல்லை" என்பதனுள் அடங்கியவோர் தத்துவத்திற்குத் தலைவணங்காமற் செல்லலரிது. அது பின்னர்.

கலித்தொகை

[215-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 9.

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நோக்கி, "நீர் காட்டினைக் கடந்து பொருள் தேடும்பொருட்டுப் பிரியப்போகின்றீர் என்று யான் தலைவிக்குக் கூறுவேனானால் அப்பொழுதே அவள் உயிர் நீங்கும்" எனக் கூறி அவன் செலவை அச்சமயம் நிறுத்தினள். பின்னர் அவள் தலைவிக்கு அச்செய்தியைக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோ
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலி [ல்
னலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவரால் கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய உயர்மர வெஞ்சுரம்

இடைகொண்டுபொருள்வயினிறத்திநீ யெனக்கேட்பி
னுடைபுநெஞ் சுகவாங்கே யொளியோடற் பாண்ம
படையமை சேக்கையுட் பாயலி னறியாய்நீ [ன்னோ
புடைபெயர்வா யாயினும் புலம்புகொண் டினைபவள்;
முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ யெனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாண்மன்னோ
நனிகொண்ட சாயலா ணயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினுந் துறப்பஞ்சிக் கலுழ்பவள்;
பொருணோக்கிப் பிரிந்துநீ போகுதி யெனக்கேட்பின்
மருணோக்க மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாண்மன்னோ
விருணோக்க மிடையின்றி யீரத்தி னியன்றநின்
னருணோக்க மழியினு மவலங்கொண் டழிபவள்;

எனவாங்கு,

வினைவெஃகி நீசெலின் விடுமிவ ளுயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவே னெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனனாற் செறிகநின் வளையே.

(தரவு)

(வரி. 1—7) வறியவன் இளமைபோல் - வறுமையையுடையவனுடைய இளமை (அவனுக்குப் பயன்படாமை) போல, வாடிய சினையவாய் - வாடிய (இலைகளைக் கொண்ட) கிளைகளை உடையனவாயும், சிறியவன் செல்வம் போல் - அறிவில்லாதவனிடத்தில் உள்ள செல்வம் (எவர்க்கும் பயன்படாமை) போல, சேர்ந்தார்க்கு நிழல்இன்றி - தம்மை வந்து அடைந்தவர்களுக்கு நிழல் கொடுத்தல் இன்றியும், யார்கண்ணும் - எவரிடத்திலும், இகந்துசெய்து (அறத்தை) மீறிச் செய்து, இசை கெட்டான் - புகழ் கெட்டவனுடைய, இறுதிபோல் - முடிவைப்போல, வேரொடு மரம் வெம்ப - வேரோடு மரங்கள் காய்ந்துபோகும்படி, விரி கதிர் - விரிந்த கிரணங்களையுடைய சூரியன், தெறுதலின் - சுடுதலால், அலவுற்று குடி கூவ - வருத்தமுற்றுக் குடிகள் கதறும்படி, ஆறு இன்றி - நல்ல நெறி இன்றி, பொருள் வெஃகி - பொருளை விரும்பி, கொலை அஞ்சா - கொலைத்தொழிலுக்கு அஞ்சாத, வினைவரால் - அமைச்சரின் (போதனையால்), கோல் கோடியவன் - அரசாட்சிமுறை தவறிய மன்னனுடைய, நிழல் உலகுபோல் - குடைநிழற்கீழ் வாழும் குடிகளைப்போல, உலறிய உயர் மர வெஞ்சுரம் - உலர்ந்த உயர்ந்த மரங்களையுடைய கொடிய காட்டை.

வாடிய சினையவாய் நிழலின்றி மரம் வெம்ப விரிகதிர் தெறுதலின் உலறிய உயர்மர வெஞ்சுரம் எனக் கூட்டுக.

(தாழிசை)

(வரி. 8—11) படை அமை - (செம்பஞ்சு, வெண்பஞ்சு முதலியன ஒன்றன்மேலொன்றாக) அடுக்குதல் பொருந்திய, சேக்கையுள் - படுக்கையிலே, பாயலின் - தூக்கத்தில், அறியாய்நீ - நீ அறியாதவனாய், புடை பெயர்வாய் ஆயினும்-(சிறிது) விலகுவாய் ஆயினும், புலம்புகொண்டு - தனிமைகொண்டு, இனைபவள்-வருந்துபவள், இடைகொண்டு - (கூடியிருக்கும் காலத்தின்) இடையிலே பிரிதலை மனத்தே கொண்டு, பொருள்வயின் -பொருளின் பொருட்டு, நீ இறத்தி என கேட்பின் - (வேறு நாட்டிற்கு) நீ போவாய் என்று யான் கூறக்கேட்பின், நெஞ்சு உடைபு உக - மனம் அழிந்து கெட, ஒளி ஓடற்பாளோ - ஒளி கெடுவாளோ? இறந்தே விடுவாள்.

இனைபவள் ஓடற்பாளோ எனக் கூட்டுக.

வயின் - எழாம் வேற்றுமைச சொல்லுருபு, நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்தது. (உருபு மயக்கம்.)

அறியாய் - முற்றெச்சம்
ஓகாரம் - எதிர்மறை
மன் - அசை
ஓடற்பாள் - வினைத் திரிசொல்

(வரி. 12 - 15) நனி கொண்ட சாயலாள் - மிகுந்த மென்மையை உடையவள், நீ நயந்து - நீ விரும்பி, நகையாக - விளையாட்டாக, துனிசெய்து - ஒரு பிரிவைச்செய்து, நீடினும் - அதிலே சிறிதுபொழுது அதிகப்படினும், துறப்பு அஞ்சி கலுழ்பவள் - அப் பிரிவுக்குப் பயந்து கலங்குபவள், முனிவு இன்றி - (பிரிதலில்) வெறுப்பின்றி, முயல்பொருட்கு - முயன்று தேடும்பொருள் காரணமாக, நீ இறத்தி என கேட்பின் - நீ செல்லுவை என்று யான் கூறக் கேட்பாளாயின், பனிய கண் - நீருள்ள கண்கள், படல் ஒல்லா - உறக்கத்தைப் பொருந்தாவாய், படர் கூர்கிற்பாளோ - (நினைவால் உண்டாகிய) நோய் அதிகரிக்கப் பெறுவாளோ? இறந்தே விடுவாள்.

கூர்கிற்பாள் - வினைத்திரிசொல்
மன் - அசை
ஓ - எதிர்மறை

(வரி. 16 - 19) இருள் நோக்கம் -(மனத்திற்குத்)துன்பத்தைத் தருகின்ற எண்ணம், இடை இன்றி - இடையிலே பொருந்துதல் இன்றி, ஈரத்தின் இயன்ற - அன்பாலாகிய, நின் அருள் நோக்கம் - நினது அருட்பார்வை, அழியினும் - நீங்கினும், அவலம் கொண்டு அழிபவள் - துன்பத்தால் (நெஞ்சு) அழிபவள், பொருள் நோக்கி - பொருளைக் கருதி, நீ பிரிந்து போகுதி - நீ பிரிந்து போவை, என கேட்பின் - என்று (யான் சொல்லக்) கேட்பின், மருள் நோக்கம் மடிந்து - (கண்டார்) மருளும் அழகு கெட்டு, ஆங்கே - அப்பொழுதே, மயல் கூர்கிற்பாளோ - மயக்கம் மிகுவாளோ? இறந்தே விடுவாள்.

ஓ - எதிர்மறை
மன் - அசை

(தனிச்சொல்)

எனவாங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி 21 - 24) புனை இழாய் - அழகு பொருந்தச் செய்யப்பட்ட ஆபரணங்களையுடைய பெண்ணே, வினைவெஃகி - உன்காரியத்தையே விரும்பி, நீ செலின் - நீ போவாயானல், இவள் உயிர் விடும் என - இவள் உயிரை விட்டுவிடுவாள்

என்று, நின் நிலை - உனது நிலைமையை, யான் கூற-யான் சொல்ல, நிலவுவேல் நெடுந்தகை - ஒளிபொருந்திய வேலாயுதத்தையுடைய பெரியோன், நீள் இடை செலவு - நீண்ட வழியிடத்துச் செல்லுதலை, பை என ஒழிந்தனன். மெல்லத் தவிர்ந்தான், நின் வளை செறிக - (ஆகையால்) நினது வளைகள் கழலாதிருப்பனவாக.

ஆல் - அசை

பாலைக்கலி 10.

பொருள் தேடச் சென்ற தலைவன் வாராமையின் அவன்மேல் தன் கருத்தைச் செலுத்திய தலைவி தோழியை நோக்கி, "கனங்குழாய், காட்டிடை, யானை புறு முதலியவற்றிடத்து நிகழ்வனவாக நம் தலைவர் கூறிய செயலும், பல்லிகளின் கூற்றுக்களும், இடக்கண்ணின் துடிப்பும் அவர் நம் புனைநலம் கெடாத வகை வந்தேவிடுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன" எனக் கூறி ஆற்றி இருந்ததைக் கூறுவது இச்செய்யுள்.

அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர் [னி
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி
அடிதாங்கு மளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப் [னரே;
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்த
இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறாஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்
எனவாங்கு, [தனரே;
இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.

(தரவு)

(வரி. 1—5) அரிதுஆய-(பெறுதற்கு) அருமையதாகிய, அறன் எய்தி - தருமம் செய்யும் குணத்தைப் பெற்று, அருளியோர்க்கு அளித்தலும் -தமக்கு அருள் செய்தோர்க்குக் கொடுத்தலும், பெரிதுஆய - பெரியதாகிய, பகை வென்று-பகைமையை வென்று, பேணாரை தெறுதலும் - தம்மை வந்து வழிபடாதவரை அழித்தலும், காதலின் - (முற்பிறப்பில் இருவருக்கும் உண்டான) காதலினாலே, புரிவு அமர் - (இப்பிறப்பில்) மனம் பொருந்துதல் அமர்ந்த, புணர்ச்சியும் -சேர்க்கையினையும், தரும் என - தரும் என்று (நமக்குக் கூறி), பிரிவு எண்ணி - பிரிதலை நினைத்து, பொருள் வயின் - பொருளின் பொருட்டு, சென்ற நம்காதலர் - போன நம் அன்பர், வருவர்கொல் - வருவர் போல இருந்தது, வயங்கு இழாஅய் - விளங்குகின்ற ஆபரணங்களையுடைய பெண்ணே, யான் வலிப்பல் - யான் (அவர் வரவினைத்) துணிகின்றேன், இனி கேளள்- இப்பொழுது (நீ அதற்குக் காரணம்) கேள்.

பொருளானது, அளித்தலும் தெறுதலும் புணர்ச்சியும் தரும் எனச் சென்ற நம் காதலர் வருவர் எனக் கூட்டுக.

(தாழிசை)

(வரி. 6 - 9) கனங்குழாஅய் - கனமாகிய குழையினை உடையாய், காடு - காடுகள், அழல் அன்ன வெம்மையால் - நெருப்புப்போன்ற வெம்மையினால், அடிதாங்கும் அளவு இன்றி - பாதம்பொறுக்கும் அளவின்றி, கடிய என்றார் - கடுமையை உடையனவாய் இருக்கும் என்று சொன்னார். (ஆனால்) துடிஅடி - துடியைப்போன்ற அடியினையுடைய, கயந்தலை-யானைக்கன்றுகள், கலக்கிய சின்னீரை - கலக்கிய சிறிய நீரை, களிறு - ஆண் யானைகள், பிடி ஊட்டி - முதலில் பெண்யானைகளை உண்பித்து, பின் உண்ணும் - பின்பு தாம் குடிக்கும், என உரைத்தனரே - என்றும் சொன்னாரே.

(வரி. 10 - 13) காடு - காடுகள், இலை தீந்த - இலைகள் உலர்ந்த, உலவையால் - கொம்புகளால், இன்பத்தின் இகந்து ஒரீஇ - இன்பத்தை விட்டு நீங்கி, துன்பு உறாஉம் தகைய-(சென்றோரைத்) துன்புறுத்தும் தகைமையை உடையன, என்றார் - என்று சொன்னார். (ஆனால்) அக்காட்டுள்-அக்காடுகளிலே, அன்புகொள் - அன்பு கொண்ட, மட பெடை-மடப்பத்தையுடைய பெடைகள், அசைஇய - (வெம்மையால்) மெலிவுற்ற, வருத்தத்தை - துயரத்தை, புறவு - (ஆண்) புறாக்கள், மென்சிறகரால்-தமது மெல்லிய சிறகுகளினாலே, ஆற்றும் - போக்கும், எனவும் உரைத்தனரே - என்றும் சொன்னாரே.

(வரி. 14 - 17) காடு - காடுகள், கல்மிசை-மலைகளின் மேலுள்ள, வேய் வாட - மூங்கில்கள் வாடும்படி, கனை கதிர்-(சூரியனுடைய) செறிந்த கதிர்கள், தெறுதலால் - சுடுதலால், துன்னரூஉம் தகைய-சேர்தற்கு அரிய தகைமையினை உடையன, என்றார் - என்று கூறினார்.(ஆனால்) அக்காட்டுள் - அந்தக் காடுகளில், இன் நிழல் இன்மையால் - இனிய நிழல் இல்லாமையால், வருந்திய மட பிணைக்கு - வருத்தமுற்ற இளமையையுடைய பெண் மானுக்கு, கலை - ஆண் மானானது, தன் நிழலை கொடுத்து அளிக்கும்- (தான் நின்று) தன்நிழலைக் கொடுத்து அதன் உயிரைக் காப்பாற்றும், எனவும் உரைத்தனரே - என்றும் சொன்னாரே.

(தனிச்சொல்)

எனவாங்கு - அசை.

(சுரிதகம்.)

(வரி. 19 - 22) இனை - இப்படிப்பட்ட (என் நினைவை அவர்க்கு உண்டாக்கக்கூடிய) நலம் உடைய - நன்மைகளையுடைய, கானம் சென்றோர் - காட்டிற் சென்றவர், புனை நலம் - (எனது) அழகிய நலத்தை, வாட்டுநர் அல்லர் - கெடுப்பவர் ஆகமாட்டார். (ஏனென்றால்) மனைவயின் - நம் வீட்டில், பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன - பல்லிகளும் (தகுந்த) இடத்தே (அவர் வரவிற்குப்) பொருந்திக் கூறின, நல் எழில் உண்கணும் - நல்ல அழகையுடைய எனது மையுண்ட கண்ணும், இடம் ஆடும் - இடப் பக்கம் துடிக்கின்றது.

ஆல் - அசை.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலையம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

ஞான தீபம்

[429-வது பக்கத் தொடர்ச்சி]

துயரத்தின் கொடுமையைக் குறைத்து, வாழ்க்கையாகிய கடினப்பாதையைஎளிதில்கடந்துசெல்லும் பொருட்டுப் பதப்படுத்தி உதவக்கூடிய ஜீவான்மா இவ்வுலகில் ஒன்றேயுளது; அஜ்ஜீவான்மா தாயாவள். துக்கம் ததும்பப்பெற்ற வாழ்க்கைக் கோப்பையில் ஓர் துளி மதுவை வார்த்து ஆற்றுவிப்பதற்காகத் தாயை நமக்குக் கடவுள் அளித்திருக்கின்றனர் போலும். பின்னாட்களில் சம்பவிக்கப்போகின்ற அவதிகளாகிய காரிருளைத் தன் அன்பாகிய சிறகுகளால்மறைத்து இளம்பருவத்தை இனிது செலுத்தற்காக அவள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றாள் போலும். குறைவுறாத அன்புப் பெருக்கால் நம்முடைய குற்றங்குறைகளை மன்னித்துத் தீர்த்து மறந்து, இனிய புன்சிரிப்பினால் தைரியத்தை ஊட்டி உதவுபவள் தாயேயாம். அறம், உதாரத்வம், நெஞ்சக்கனிவு முதலியவைகள் உறைவிடமாயும், தூய்மை நேர்மை பக்தி அனையவைகளின் உற்பத்திஸ்தானமாயும் திகழ்பவள் அன்னையாம். அன்புமிக்க எண்ணங்களை எழுப்பி, இடர்களைத் தெறித்து, இன்னல்களை அகற்றி, சோகத்தினால் பெருகியோடும் கண்ணீரைத் துடைத்து, தூர்ப்பாக்கியவானைக் கைகொடுத்து நிறுத்தி,பசியை ஆற்றி, தாகத்தைத் தணித்து, தியாக சிந்தனையை வளர்த்து அனுகூலங்களைச் செய்கின்ற தெய்வம் மாதாவாம். கோழைத் தனமாகிய பேயை உருட்டிப் புரட்டி ஓட்டும் சக்தியின் அணங்காம் தாய். நூல்களும் பள்ளிக்கூடங்களும் தந்தையும் புதுப்புது விஷயங்களை நமக்குப் புகட்டிவரலாம்; ஆயினும், தயாளத்வமும் உள்ளக்கனிவும் பெருங்குணநடத்தைகளும் அன்னையிடமிருந்துதான் வெளியாகி நம்மையடைந்து மேலேற நமக்கு உதவுகின்றன.

அன்பற்ற வாழ்க்கை நக்ஷத்திரங்களற்ற வானத்தை ஒத்ததாகும்.

சக்தியின் தோற்றங்களின் பரஸ்பர முரணும் எதிர்ப்புமே வாணாளின் உயர்வுக்கு ஏற்ற தூண்டுகோல்களாம். இருதிறக் கொள்கைகளில் நன்மையும் சிறப்பும் உண்மையும் அளிக்கவல்லது யாதெனின், அவைகளுள் எதில் பரஸ்பர முரண் நிரம்பியுள்ளதோ அஃதேயாம். அதினின்றுதான் விசாரித்து ஆராய்ந்தறியுங் குணம் உண்டாகிப் பெருகுகின்றது.

மேலேற வேண்டுமென்ற ஆர்வமும், உற்சாகமும், நம்பிக்கையும், வீரியமும் நிறையப்பெற்ற உழைப்பும் மிகச் சிறந்தனவாம். உள்ளதை இறுகப்பிடித்துவைத்துக்கொள்ளவேண்டுமென்றேனும், அல்லது பிறர் உடைமைகளைப் பிடுங்கித்தான்மாத்திரம்அனுபவிக்க வேண்டு மென்றேனும் தோன்றுகின்ற ஆசையை வளர்ப்பதைக் காட்டிலும், ஒவ்வொருவர் நன்மையையும் பொது ஒற்றுமையையும் செழிக்கச் செய்யும் குணத்தை மேன்மேல் வளர்த்தல் எல்லாப் படியாலும் நல்லதாம்.

பிறரை அடக்கி ஆளவேண்டுமென்ற தீய எண்ணம் நீங்கி அன்பும் இனிமையும் கூடப்பெற்று, குரூரமும் பொறாமையும் கபடமும் கழிந்து, வாழ்க்கையைப் பலப்படுத்தவல்ல சீரிய குண நடத்தைகள் அபிவிர்த்தியாகும்பொருட்டு ஒவ்வொருவரும் முனைந்து ஒத்து உழைப்பாராயின் இவ்வுலகம் தேவலோகமாக மாறிவிடுமென்பதில் ஐயமில்லை.

அபாயமும் மறமும் தோல்வியும் துக்கமும் பூரிக்கப் பெற்ற இவ் வுலகவாழ்க்கையுடன், ஓய்வொழிவுகளில்லாமல், சதாகாலமும் போர்புரிந்து அவைகளை வென்று அடக்கும் ஜீவனே மெய்ஜ்ஜீவன். இதற்குத் துணையாவது பற்பல கலைகளின் பயிற்சியேயாம்.

நன்மை தீமை, நீதி அநீதி, வலி வருத்த மேக்கமாகியவைகளைக் கடந்து, வாழ்க்கையின் உள்ளக் கருத்தையும் மெய்ப் போக்கையும் அறிவுறுத்தி, வாழ்க்கையானது சக்தியின் லீலையென நிரூபிப்பது எழிற்கலையாம். விரூபங்களை விடுத்து, துக்கவுணர்ச்சியைத் துடைத்து, பயப்பேயை முறித்துச் சாந்தியையும் ஆனந்தத்தையும் அளித்துப் பரப்புவன அக்கலைகளே.

இழிவு அழிவுகளுக்குக் காரணங்களான தீமைகளால் தாக்கப்படுகையில், அவைகளை எதிர்த்து வெல்லுதலே வாழ்க்கையின் நோக்கமாகும்; இதுவே ஜீவான்மாவின் விசேஷ குணமாகும்; ஓடிப்பதுங்குதலும், அல்லது, அப்புறம் அகன்று ஒளிதலும் வீரமல்ல. தீமைகளின் இடைவிடாத எதிர்ப்பும் தாக்கலுமான அனலினாற்றான் ஜீவன் பதப்படுத்தப்பட்டு வலியுறுகின்றது. தீமைகளை எதிர்த்து ஒழித்தலினால் வாழ்க்கை உரம் பெறலாம்; எதிர்த்துப் போர் புரிந்து வெல்வதினால் சீர் உறலாம்; மற்று, இவைகளிலொரு வழியையும் தழுவி ஒழுகாத ஜீவான்மா ஜீவித்தற்குத் தகுதியற்ற தாகிவிடுகின்றது.

விவேகமானது ஏகாந்தத்தில், கல்விப் பயிற்சியினால் வளர்கின்றது; சீர்மையும் ஞானமும் பெரிய உலகாகிய பலதிற வாழ்க்கை யநுபவங்களென்னும் ஆறுகளில் நீந்திக் குளித்தலினின்றுதான் பெருகுவன போலும்.

விவேகி தன்னா லியன்றதை மேற்கொண்டு செய்கின்றான்; ஆனால், வரப்பிரசாதியோ செய்ய நியமிக்கப்பட்டவைகளைத் தெளிந்து, நிர்ணயித்தவைகளை ஏற்றச் சடுதியில் செய்துமுடிக்கின்றான்.

ஒரு விஷயம் அல்லது வஸ்துவைப் பற்றிய அறிவே அவ்விஷயம் அல்லது வஸ்துவின்மீது பற்றை உண்டுபண்ணுகின்றது; அவ்வறிவு எவ்வளவு வளர்கின்றதோ, அதே அளவுடன் அன்பும் வளர்கின்றது.

வெற்றியினின்று உண்டாகும்கீர்த்தியைவிட மிக்க மேலானது அக் கீர்த்திஉணர்ச்சியை வென்று உயர்தலாம்.

வாழ்க்கையை உரப்படுத்துவது கல்வி அறிவாகும்; மூப்புப் பருவத்தில், அவலக் கவலைகளைக் குறைத்து, எஞ்சி நிற்கும் கேவலப் பற்றுக்களைப் பறக்கச்செய்யும் சக்தி உடையதாம் கல்விப்பயிற்சி. ஆதலின், விவேகத்தை வளர்த்து ஞானம்பெற ஒவ்வொருவரும் இளமை முதற்கொண்டே முயற்சி செய்யவேண்டும்.

நண்பனுடைய புகழுரைகளையும் ஹிதோபதேசங்களையும் காட்டிலும் பகைவனது சுடுசொற்களும் மதிப்புரைகளுமே நம்பத் தக்கன. ஒருவனுடைய குண நடத்தைகளை அதி தீர்க்கமாக ஆராய்ந்து பார்த்து ஒளிக்காமல் வெளியிடுபவன் அவனுடைய சிநேகிதனல்லன். மற்று ஓர் பகைவனேயாம். மெய்ச் சிநேகிதன் எல்லா விதத்திலும் நம்மை ஒத்துள்ளவன், நம்முடைய பிரதிபிம்பமாக விளங்குபவன்; விரோதியோ [illegible]

செய்பவன்; இக் குணமே நம்மை நன்முக அறிந்து காண, சக்தியை பகைவனுக்கு அளித்து உதவுகின்றது. ஆதலால், பகைவர்களது பழிப்புரைகளைக் கேட்டு அலக்ஷியஞ் செய்யாமலும் மனக்கலக்க முறுமலும் நம்முடைய குணவொழுக்கங்களை நிஷ்கபட மனத்துடன் ஊன்றிப் பார்த்தறிந்து திருத்திக்கொள்ள வேண்டும்.

உலகைப் பற்றிய முற்றறிவும் கடவுளைப்பற்றிய பூரண ஞானமும், உண்மையில், ஒன்றேயாம்.

பொருள், கீர்த்தி, சுகம் முதலியவைகளை அடைய வேண்டுமென்ற இழிந்த நோக்கங்களுடன் ஜபமும் தவமும் செய்யும் மக்கள், இனிய தின்பண்டத்தின் பொருட்டுக் கையை நக்கி வாலைக் குழைக்கும் நாயின் இனத்தைச் சேர்ந்தவராவர்.

தங்கத்தின் பிரகாசமும் சிறப்பும் சுடச்சுட அதிகரித்து விளங்குதல் போல், மெய்க்கடவுளின் தன்மை நம்முடைய கஷ்ட நஷ்டங்களில் ஈடுபட்டுப் பழகுதலினின்று நிரூபிக்கப்படுகின்றது.

புரைதீர்ந்த ஞானமும் கட்டுக் கடங்காத பூர்ணதையும் நிரம்பப் பெற்றுள்ள காரணத்தால் எதையும் ஏற்றுச் செய்யும் புருஷனே சுதந்தரியாவான்; நன்மை தீமை, உயர்வு தாழ்வு, இன்ன பிடர்களை வென்று கடத்தலே சுதந்திரத்தின் இலக்ஷணமாகும்.

குளிரினின்று நம்மை உடைகள் பாதுகாத்தல் போல், தூஷணைகளினின்று நம்மை க்ஷமை இரக்ஷிக்கின்றது. வலிவருத்தங்கள் எவ்வளவு அதிகரிக்கின்றனவோ, அதே அளவுடன் நம்முடைய பொறுமையாகிய கவசத்தை வலிமையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

குளிரால் விறைத்துத் துடிப்பவனுக்கு ஆடைகள் உதவுதல் போல், தீங்கிழைக்கப்பட்டவர்களுக்குப் பொறுமை துணையாகின்றது. குளிர் அதிகரிப்பின் அதிக உடைகளைப் போர்த்துக் குளிரைப் போக்குதல் போல், அவதூறும் மானபங்கமும் உண்டாகி நம்மைக் கலக்குமானல், பொறுமையாகிய போர்வையால் அவைகளைப் புறக்கணிப்போம்.

சகல கலைகளுக்கும் ஊற்முன அனுபவத்தால் மாந்தர் வஞ்சிக்கப்படுவதில்லை; ஆனல், இழிந்த பிரேமைகளாலும் கேவல மனே கற்பனைகளாலுமே மோசம் போகிறார்கள். பெற்ற அநுபவத்தற்கியலாத சாதனங்களை இச்சித்துக் கற்பித்து, கிட்டாதபொழுது, அலமந்து வாடி மாய்கிருர்கள்!

பகலில் நல்ல காரியங்களில் ஈடுபட்டு உழைப்பவன், இரவில், சுகமாக உறங்குதல்போல், வாழ்வை நன்னெறியிற் செலுத்தியவன், அந்திய காலத்தில், கலக்கமுறுமல் சந்தோஷத்துடன் மரணத்துட் பாய்கின்றான்.

வீண் கவலைகளி லுழன்று துயர்படுவதற்கு வேண்டிய சமயமும் காரணமும் ஓய்வொழிவுகளில்லாமல் உழைப்பவர்களுக் கில்லைபோலும்.

உன் அந்தரங்க எண்ணம் அல்லது அபிப்பிராயத்தை ஒளிக்காமல் நீ வெளியிடுவாயாகில், கயவரும் தூர்த்தரும் உன்னை ஒருபொழுதும் அணுகமாட்டார்.

ஓர் ராஜாளி, காகத்தைக் குருவாகக் கொண்டு கழிக்கும் காலம் வீணன்றே?

பரிபூர்ண சக்தியே எழிலாகும். செயல்களாக மாற்றப்படாத விருப்பங்களே பற்பல பிணிகளுக்கு விளைநிலமாவன போலும்.

இப்பிரபஞ்சத்தில் ஒருவித ஆதாரவும் அற்றஜீவன் ஒன்றுமில்லை.

சுகபோகங்களினிமித்தம் கலைகள் பயிலப்படுவனவல்ல; பூரண ஞானமும், பல்வேறு அநுபவங்களும், நிஷ்கபடச் செயல்களும் கைவருதற்கே கலைகள் பயிலப்படுகின்றன. வாழ்க்கையினின்று தப்பி யோடி ஒளிந்து பிழைப்பதற்காகக் கலைப்பயிற்சி விரும்பப்படுவதன்று. சுகதுக்கங்களையும், வெற்றி தோல்விகளையும், மேன்மை தாழ்மைகளையும், தூஷணை பூஷணைகளையும் எதிர்த்துத் திருத்தி யடக்கிச் சாந்தியும் ஆனந்தமும் பெற்று உய்வதற்கேயாம்.

புரட்சிகளுக்கெல்லாம் மூலகாரணமும் பக்கபலமுமாவது ஞானமாகும். இஞ்ஞானம் பொருந்தியவரைப்பற்றி நடப்பவர்களின் பக்தி, அல்லது சிரத்தையைப் பொருத்துளவாம் அப்புரட்சிகளின் வெற்றியும் தோல்வியும்.

புஜபலமும் செல்வாக்கும் சுயநலச் சிந்தையும் மிக்க கயவர்களின் ஆட்சியினின்று விடுதலைபெற்று, சுயமேன்மையையும் சக்தியையும் சுயவிசாரிப்பிணுலும் சுயநிர்ணயத்திணுலும் பிரஸ்தாபிக்க முயற்சிக்கும் மாந்தர்க்கு மேல்வரிச் சட்டமாக நின்று துணைபுரிபவர் யதாபூர்விகளல்லர்—தீர்க்கதரிசிகளேயாம். மனிதர்களுக்குத் தலைவர் எவரெனின், சுயஞானம் அல்லது அக அறிவு நிரம்பிய சத் புருஷர்களேயாம்.

பிராகிருதம் அப்பிராகிருதம் என்பன ஒரே சத்தின் இரு பிரிவுகளேயன்றி, நாம் பார்த்தறியும் உலகம்—பார்த்தறியாத (அல்லது அறியக்கூடாத) உலகம் எனப் பிதற்றும்படி இரண்டு வெவ்வேறு உலகங்களல்ல; பின்னது முன்னதின் நித்தியமான ஆழ்ந்த ஊற்றாகும்.

ஐயம் விபரீதங்கள் மூலமாகத்தான் ஞானமும் மேலேற்றமும் உண்டாகிப் பெருகுவன போலும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



டானிக்குகள் :	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள் :		
சந்தனதி	6 அவுன்ஸ் ரூ.	1-0-0
அமிர்தாமலக	”	0-12-0
பிருங்காமலக	”	0-12-0
ஸ்திரீகளுக்கு		
ஸுமங்கல டானிக்		2-0-0
கர்ப்பாசய டானிக்		2-0-0
ப்ரஸவ லேகியம்		1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராச

“நஞ்சன்கூடு பல்பொடி”

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. வி. மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்த சிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலக்ஸ்

ஜ்வரேக் சோல் எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பிஞல் வெட்கக்கேடு. கல்லாதவர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் கைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானேர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, “தசரதன் குறையும் கைகேசி நிறையும்” என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவுநாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னெடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய ‘மாதவி மாதவம்’ என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையிஞ மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 60.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெருத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E N தணிகாசல முதலியார், B A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனுக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேருத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னுப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜவஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றந்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இராஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனாக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திரு அருட்பா

பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஒன்றே

சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி

(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

ANCIENT JAFFNA

Mudaliar C. Rasanayagam C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

Rs. 5 8 0 Postage extra.

KALANILAYAM

Vellala Street, Purasawalkam, Madras.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி

நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B. A., B. L.,

விலை அணா **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

வர்த்தமானம்

சாகாதிருக்க வழி:—சேலத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சௌராஷ்டிர வாலிபர் சங்கஆண்டு விழாவில் தயானந்த சரஸ்வதியார் என்னும் ஆரிய சமாஜக் கொள்கையினர், மக்கள் பிரமசரிய விரதம் பூண்டு, பிராணயாமம் செய்துவந்தால் ஆயிரம் வருஷம் ஜீவித்திருக்கலாம் என்றும், நாம் இளவயதில் சாவதற்குக் காரணம் களியாட்ட வாழ்க்கையென்றும் கூறினர் என்று சேலம் செய்தி கூறுகின்றது.

***

சிறைச் செலவு:-இங்கிலாந்தில் சிறைகளில் இருக்கும் குற்றவாளிகளுக்காகத் தலைக்கு ஆண்டொன்றிற்கு சராசரி 240 பவுன் வீதம் செலவாகின்றதாம். அத்தொகையில் பாதிகூட இந்திய சிறைச்சாலைகளில் செலவாகின்ற தில்லையென்று ஒரு பத்திரிகாசிரியர் வருந்துகின்றார்.

***

பெண் குற்றவாளிகளுக்கு வசதி:—அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில் பெண்குற்றவாளிகளுக்கென்று சிறையில் அதிக வசதிகள் செய்துகொடுக்கப் பெற்றிருக்கின்றன. பெண் கைதிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு வீடுபோன்ற வசதிகளையுடைய தனி அறை அளிக்கப்படுகின்றது. அதனில் ஸ்நானத்திற்கென்று ஒரு தனியிடமும், சமையல் அறையும் உளது. அதிகாரிகளுக்கு அடங்கியும், சிறை விதிகளைக் கடவாமலும் நடந்துகொள்ளும் மாதர்களுக்கு அவர்கள் இருக்கும் அறைகளில் ரேடியோ வைத்துக் கொடுக்கப்பெறுகின்றதாம். மெக்ஸிகோ அரசாங்கத்தாரின் சிறந்த சிறை முறையை மற்ற நாட்டு அரசாங்கத்தாரும் இந்திய அரசாங்கத்தாரும் கைக்கொள்ளுதல் நலமாகும் என்று ஒரு பத்திராதிபர் யோசனை கூறுகின்றார்.

***

விநோத வழக்கு:—நியூயார்க்கில் எல்மீரா என்னுமிடத்தில் தெல்மா என்னும் பெயருடைய ஓரழகிய மாது இருக்கின்றாள். அவளைகாண்பவர்கள் எல்லாம் அவள் அழகில் மயங்கி அவளை முத்தமிட விழையவே, ஒரு முத்தத்திற்கு 3000 பவுன் விலை வீதம், வியாபாரம் செய்துவந்தாள். ஒருநாள் அவள்மோட்டாரில் சென்றுகொண்டிருக்கையில் மோட்டார் வண்டிக்கு ஆபத்து நேர அம்மாது காயமடைந்தாள். அதனால் அவள் முகவசீகரம் போய்விட்டது. இப்பொழுது அவள் முத்தத்திற்கு விலைகொடுக்க எவரும் முன்வருவதில்லை. எனவே அவள் மோட்டார் ஓட்டிமீது 15000 பவுன் நஷ்டஈடு வேண்டுமென்று வழக்குத் தொடுத்திருக்கின்றாள்.

***

நடிகர் மணம்:—அமெரிக்காவிலுள்ள சினிமா நடிகர் வசிக்கின்ற ஹோலிவுட்டில் இரு சினிமா நடிகர் மணந்துகொண்டனராம். மணமகன், மணமகள், கலியாணச் சடங்கை நடத்திவைக்கும் பாதிரியார், விருந்தினர்கள் எல்லோரும் கலியாண காலத்தில் நிர்வாணமாக இருந்தனராம். இது இயற்கை மணம் என்று கூறப்படுகின்றது. நமது முதல் தந்தையும் தாயுமான ஆதாமும் ஏவாளும் இப்படித்தான் இருந்தனர் என்று சொல்லிக்கொள்கின்றார்களாம்.

***

க்ஷவரத்தொழில்:—பஞ்சாப் வாசியான அமரநாத் என்பவர் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர். அவருக்கு இப்பொழுது 25 வயது. அவர் க்ஷவரத் தொழிலைக் கற்றுக்கொண்டு வருவதற்கென்று இங்கிலாந்து சென்றிருக்கின்றாராம். அவர் இந்தியா திரும்பியதும் க்ஷவரத் தொழிற்சாலை ஒன்றை பஞ்சாப்பில் ஸ்தாபிப்பாராம்.

***

தொழிலின் பெருமை:—கல்கத்தாவிலுள்ள சுதீச சந்திரராய் என்னும் ஒரு பி. ஏ. பட்டதாரி ரிக்ஷா இழுத்துப் பிழைக்கின்றாராம். தொழிலின் பெருமையை விளக்கவும், எளிய வாழ்க்கையை மேற்கொள்ளவும் இத்தொழிலைத் தாம் ஏற்றதாகஅவர்கூறுகின்றாராம்.

***

புத்தமதப் பிரசாரம்:—புத்தமதத்தை மேல்நாடுகளில் பரப்புவதற்கென்று புத்தசன்யாசிகள் பலர் ஐரோப்பா செல்கின்றனராம். உலகில் புத்தமதம் பரவினால் யுத்தம் நின்றுவிடும் என்றும், சகோதரத்துவம் ஏற்பட்டுவிடும் என்றும் அவர்கள் கூறுகின்றார்களாம். பர்மாவில் வாழ்கின்றவர்களனைவரும் புத்த மதத்தினர். சீனரும் ஜப்பானியரும் புத்தமதத்தினரே.

***

சரஸ்வதி சங்கம்:—சென்னைச் சரவஸ்வதி சங்கத்தார், ஏழை மக்களுக்கு வயித்திய வசதி தரும்பொருட்டு, சென்னையில் பல விடங்களில் வயித்தியசாலைகளை ஏற்படுத்த முயன்றுவருகின்றனர். அச்சங்கத்தின் சார்பில் பலருக்கு வயித்தியப்படிப்பும் இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றது. தமிழ் வைத்தியம் பயில விரும்புபவர்கள் சென்னைச் சரஸ்வதி சங்கத்திற்கு மனுச்செய்துகொள்ளலாம்.

***

சினிமாவில் குழந்தை:—ஓர் அமெரிக்க சினிமா நடிகர். ஒரு குழந்தையை, ஒரு காட்சிக்காகப் பழக்கி வருகின்றாராம். அந்தக் குழந்தை 8 மாதக் குழந்தையாகும். அக்குழந்தையின் பெற்றோர்க்கு 500 பவுன் கொடுக்கப்படுமாம்.

***

மனைவியை இழந்ததால் மௌனம்:—துருக்கி வாசியான ஹாசன்பே என்னும் ஒரு மகமதியர், தமது மனைவி இறந்ததற்காகக் கடந்த 65 வருஷங்களாக மௌனமாய் இருந்துவருகின்றாராம். அவருக்கு இப்பொழுது வயது 110.

***

சீனக் கோடீச்வரர்:—யூயான்சாங் என்னும் சீனர் தமது தகப்பனாரது சொத்தை வைத்துக்கொண்டு சிங்கப்பூரில் மருந்துக்கடை வைத்தாராம். பிறகு ஐரோப்பிய யுத்த சமயம் நாணயமாற்ற வியாபாரம் செய்து வந்தாராம். அந்த வியாபாரத்தில் அதிக லாபம் வரவே, மலேயாவிலும், சிங்கப்பூரிலும் நிலம் வாங்கினார். வாங்கின நிலங்களில் ஈயம் அகப்பட்டதால் வருமானம் அதிகமாயிற்று. இப்பொழுது அவருக்கு ஏராளமான ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றனவாம். அவரது காலத்திலேயே அவர் 2 கோடிப் பொன் சம்பாதித்துவிட்டார். அவருக்கு ஒரு மனைவி, 24 பிள்ளைகள். அவருக்கு 9 அரண்மனைகள் இருக்கின்றனவாம். இப்பொழுது 10-வது அரண்மனை கட்டிவருகின்றாராம். இது கட்ட 50 ஆயிரம்பொன் செலவாகுமென்று தெரிகின்றது. அவரது மூத்த மகன் இங்கிலாந்தில் படித்து, ஒரு ஆங்கில மாதை மணந்துகொண்டுவந்திருக்கின்றானாம். அத் தனவந்தருக்கு இப்பொழுது வயது 57.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ.	1	0	0
5 டப்பிகள்	ரூ.	4	0	0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security—
- for the policyholder from an investment point of view.
- for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras.
OR
R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS

covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras.
OR
R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)